குமரகுருபரன்



மலர் 14] 1963-௵ ஆடி-மீ 1ம் உ (17-7-63) [இதழ் 7

தனிப் பிரதி 13 நயா பைசா வருடச் சந்தா ரூ. 1¾

ஆசிரியர் குழு

1. வித்துவான் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் அவர்கள்
ஸ்ரீ காசிமடம் இளவரசு, திருப்பனந்தாள்.

2. திரு. கே. சிவராமன் அவர்கள் M. A.,
சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்,
காசிச் சர்வகலாசாலை, காசி.

3. திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M. A. B. O. L.,
பிரின்ஸிபால், செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள்.

4. ராவ்சாஹிப், வித்துவான். திரு. கு. அருணசலக் கவுண்டர்
அவர்கள், தலைமைத் தமிழ் விரிவுரையாளர், ம. தி. தா. இந்துக்
கல்லூரி, திருநெல்வேலி.

5. திரு. ஆ. சி. ஷண்முகநயினர் பிள்ளை அவர்கள் B. A., B. L.,
வழக்கறிஞர், தென்காசி.

6. திரு. டி. எச். விவேகானந்தம் பிள்ளை அவர்கள் B. A., B. L
(Verification Officer) இந்து அறநிலைய இலாகா,
20, நுங்கம்பாக்கம் ஹைரோடு, சென்னை - 6.

7. திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள் M. A.
தமிழ் விரிவுரையாளர், காசி இந்துப் பல்கலைக்கழகம், காசி.

T. M. குமரகுருபரன் பிள்ளை B. A., B. L.,
நிர்வாக ஆசிரியர்.

உள்ளுறை

உ
சிவமயம்
திருச்செந்திலாண்டவன் துணை

குமரகுருபரன்



மலர் 14 | சோபகிருது-ஆடி திங்கள் 1-ம் உ [17-7-63] | இதழ் 7

சிதம்பரச் செய்யுட் கோவை

முதுபெரும் புலவர்
ஸ்ரீமத் சிவஞானத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
திருவெண்காடு.

[கட்டுரை 70]

ஆசிரியப்பாவினத்துள், 'ஒரு பொருண்மேல் மூன்றடுக்கி வந்த ஆசிரியத் தாழிசை' என்று (பா - 47) முன் வெளிவந்த கட்டுரையில் அறிந்தீர்கள். அவ்வாறே இது கலிப்பாவினத்துள் வந்த கலித்தாழிசையாகும். அத்தாழிசை மும்மூன்றடியாய் வந்த பாடல். இஃது இவ்விரண்டடியாக அமைந்தபாடல்.

தில்லை நகரிற் சோலைகள் மிகவுயர்ந்தவை. அவற்றின் உயர்ச்சிக்கு எல்லை மேகமண்டலம் ஆகும். செல்லுந் தொழிலால் மேகம் செல்லெனப் பெயர் பெற்றது. 'செல்' என்பது முதனிலைத் தொழிற்

பெயர். அஃது ஆகுபெயராய் மேகத்தை உணர்த்துகின்றது. வானுற வோங்கி வளம்பெறவளர்ந்த தேனுறை பூம்பொழில் மேல், மேகம் போந்து தங்குகின்றன. அதனால், 'செல்லார் பொழில்' என்றார். அப் பொழில் வளம் மிக்கது தில்லை. அதனால், அத்தில்லையைச் 'செல்லார் பொழிற்றில்லை' என்றார் ஆசிரியர் குமரகுருபரர். அப்போது அங்குச் செல்லார் இப்போது சென்றால், அவ்வுண்மை புலப்படக்காணார்.

அத்தில்லையில் விளங்கும் அம்பலங்களுட் சிறந்தது சிற்றம்பலம். அங்கே திருக்கூத்தாடி நம் கருக்கூத்தை யொழிப்பது பொல்லாமணி யாகிய நடராசசிவம்.

"நெக்கு நெக்குள் உருகி உருகி
நின்றும் இருந்தும் கிடந்தும் எழுந்தும்
நக்கும் அழுதும் தொழுதும் வாழ்த்தி
நானா விதத்தால் கூத்தும் நவிற்றிச்
செக்கர் போலும் திருமேனி
திகழ நோக்கிச் சிலிர்சிலிர்த்துப்
புக்கு நிற்பது என்று கொல்லோஎன்
பொல்லாமணியைப் புணர்ந்தே."

என்று, திருவாதவூரடிகள் ஒரு முறையொடு நில்லாது பத்து முறை சொல்லி இன்புற்றும் இன்புறுத்தியும் நிற்கும் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்துள் உணர்ச்சி எழும் இங்குப் 'பொல்லாமணி' என்று பொருந்திய திருப்பெயரால்.

"புகவே தகேன் உனக்கு அன்பருள் யான் என் பொல்லா மணியே
தகவே எனை உனக்காட் கொண்ட தன்மை"?

"கருடக் கொடியோன் காணமாட்டாக் கழற்சேவடி யென்னும்
பொருளைத் தந்திங்கென்னை யாண்ட பொல்லா மணியேயோ."

என்ற இடங்களில், இத்திருப்பெயர் அமைந்த அழகை அநுபவித்து இன்புறல் வேண்டும். ஓகாரம் புலம்பலுக்கு உரியது.

அப் பொல்லா மணியைப் புகழ்மினோ என்று ஏவுகின்றார். அம் மணியின் புகழ்ச்சிக்காகப் புலவர்களை அழைக்கின்றார்.

அப்போதிருந்த புலவர்களெல்லாரும் அவ்வாறே சென்று புகழ்ந் திருந்தார்கள். தில்லைச் சிற்றம்பலத்தைப் பாடிப் பரவிப்பணிந்து போற்றி வாழ்ந்தார்கள். அதனுல்தான் தில்லைக்குரிய நூல்கள் எல்லைக்குட்படாதன வாயின.

'செல்லார் பொழிற்றில்லைச் சிற்றம் பலத்தெங்கள்
பொல்லா மணியைப் புகழ்மினோ வம்மின் புலவீர்காள்'

என்று குமரகுருபர சுவாமிகள் பிற்கூறுதற்காக முற்கூறிய திருவாசகம் "இம் மாநில முழுதும் நிகழப் பணிகொண்டு என்னை ஆட்கொண்டு ஆ ஆ என்ற நீர்மை யெல்லாம் புகழப் பெறுவது என்று கொல்லோ என் பொல்லா மணியைப் புணர்ந்தே" என்று புகழும் பொருள் அவர் அவர்க்கு வாய்ந்த திருவருள் நலம் எனத் தெரிவிக்கின்றது. அப் பொருள் சேர் புகழை மறந்து, தம் அழி நிலையைப் புகழ்ந்தழிவோர் மிக்கிலாத காலம் அது. இக்காலத்தில் புகழைப் புகன்று சொல்லித் திரு வருள்பெற விரும்புவாரும் அவரை அழைப்பாரும் எங்குளர்? இத்தகைய பாடலுக்கு இடம் ஏது? பொல்லாமணி - துளையி டாத மாணிக்கம் போன்றவர்.

திருச் சிற்றம்பலத்துப் பெரும் பொருளைப் புகழ வம்மின் என்று அழைத்தார் இத் தாழிசையில். அடுத்த தாழிசையில், புகழ்தலைத் தான்ருேன்றி யாகச் செய்யாமல், முன்னோர் புகழ்ந்த வழியில் (சம்பிரதாயம்) சிறிதும் வழுவாது புகழ்தல் வேண்டும் என்பாராய்ப், புகழ்ந்தோர்களுள் தலைமை யுடையாரைக் குறித்து, அவர்களைப் போலப் புகழ்மின்கள் என்று பணித்தருள்கின்ருர் ஆசிரியர்.

முத்தேவர் என்று திரிமூர்த்திகளைச் சொல்வது மரபு. 'மூவர் கோனுய் நின்ற முதல்வன்' என்றது திருவாசகம். அம் முதல்வன் "மூவாமுதலாய் நின்ற முதல்வன்". முத்தேவர் பிரமன், விண்டு, உருத்திரன். அம் மூவருள், (பிரமன் முதலிய மூவரையும்) தனித்தனி "அத் தேவர் தேவர் அவர் தேவர் என்று இங்ஙன் பொய்த் தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே பத்து ஏதும் இல்லாது........மெய்த் தேவர் தேவர்" சிவபிரானே என்னும் மெய்மையை உணர்ந்து, இந்திரன் முதலிய இமையவரெல்லாரும் புகழ்ந்து போற்றி

யுய்ந்தனர். போற்றுது பிழைசெய்து பட்டவை அனைத்தும் கந்த புராணம் (தக்கயாகப் படலம்) அருளிய கச்சியப்ப சிவாசாரியரும் கூற முயன்று இளைத்துவிட்டார் எனின், யாரே சொல்ல வல்லார்? திருவாசகத்தில் வரும் 'அயனை அநங்கனை' 'தக்கனையும் எச்சனையும்' 'புண்பட்டதில்லை' 'அங்கிஅருக்கன்' 'காமன் உடலுயிர்' எனத் தொடங்கும் திருப்பாடல்களையும் அத்திருமுறையில் உள்ள திருவுந்தியாரையும் நோக்கின், அத் தேவர்கள், தேவாதி தேவனை வழிபடாது பிழைத்துப்பட்ட துன்பங்களை ஒரளவுணர லாம். சிவனை மறந்தார் வாழ்ந்தார்? சிவனை நினைந்தார் கெட்டார்? முகில்-மேகம். அதை வாகனமாக உடையவன் இந்திரன். மேகவாக னன் முகிலூர்தியன் எனல் வேறன்று. முகிலூர்தியானை முகிலூர்தி என்ருர். 'கொண்டபுரிநூலான் கோலமாவூர்தியான்' (திருவாசகம்). மயிலூர்தி முதலனவும் அன்னவையே. ஊர்தி என்பது ஊரப்படும் வாகனத்தையும் ஊர்தலைச் செய்யும் (வினை) முதலையும் குறிக்கும். 'பிறைசூடி' என்பது போல வினை முதற் கும் 'விசிறி' என்பது போலச் செயப்படு பொருட்கும், வேறு பல பொருட்கும் ஒத்தது இகரவீறு. 'முகிலூர்தி முன்னுன புத்தேளிர்' என்பது இந்திரன் முதலிய இமையவர் என்ற தாம். முன்னுன முதலாய. புத்தேளிர்-தேவர். 'தேவர்கோ அறியாத தேவ தேவன்' எனினும், அத்தேவர்கோ புகழ்ந்த வண்ணம் புகழ்ந்து போற்றினுல், அப்'புகழ்ச்சி விருப்பன்' தனக்கு 'என்பணியே' கொண்டு நம் பணியெல்லாம் தன்பணியாக இனிதின் ஏற்றுத் திருவருட் பொன்பணி முதலிய யாவும் நமக்கு நல்கி நம்மை யாட்கொள்வான்.

'முத்தேவர் தேவை முகிலூர்தி முன்னுன
புத்தேளிர் போலப் புகழ்மினோ வம்மின் புலவீர்காள்'

தில்லைத் திருநகரின் மேற்பால் உள்ள திருக்கோபுரத்தின் தென்பால் எழுந்தருளி, வழிபடும் அன்பர்க்கு எல்லா நலமும் அளித்து வரும் கற்பகவிநாயகர், சிவநேசர் சிந்தையில் என்றும் இருப்பார். நீங்கா தோங்குவார். ஆசிரியர் குமரகுருபரர்க்கும் அவர்பால் நிறைந்த அன்புண்டு. அவர் வழித் தோன்றல் கட்கும் அங்ஙனமே அன்புண்டு. அக்கற்பகத்தைப் பயந்த கடவுளும் கற்பகமே.

'பொற்றுது பொதிந்த சிற்சபை பொலியப்
பச்சிளங் கொடியொடு படரும்
செக்கர் வார்சடைக் கற்பகதருவே.'

என்று (பா. 41) முன்னே இத் தொடர்கட்டுரை ஒன்றில் அறிந் திருக்கிறீர்கள். அக்கற்பகம் நடராசப்பிரானே. அவரைப் புகழ்தற்கே அழைக்கின்ருர் ஆசிரியர். கற்பகத்தைச் சார்ந் தாலே முற்பவத்திற் செய்த அவர் அவர் வினைக் கேற்பப் பயன் எய்தும். மெய்யாற் சார்ந்து வாயாற் புகழ்ந்தவர் வறிதே மீள்வரோ? முத்தியும் புத்தியும் நத்தியவண்ணம் எத்திறத்தி லும் பெறலாம்.

'ஆங்கற் பகக்கன் றளித்தருளுந் தில்லைவனப்
பூங்கற் பகத்தைப் புகழ்மினோ வம்மின் புலவீர்காள்.'

(தொடரும்)

திருமுறை நண்பர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

பதினோராந் திருமுறை

(பன்னிரு அருளாளர்கள் பாடிய நாற்பது நூல்கள் அடங்கியது.)

புதிய பதிப்பு

சுபகிருது வருடத் தைப்பூச வெளியீடு.

552 பக்கங்கள் கொண்டது. (32+506+14)

உயர்ந்த ரக வெள்ளைத்தாளில் பெரிய எழுத்தில் தெளிவாக அச்சிடப்பெற்றது.

பிரதி ரூ. 1-50. தபால் கட்டணம் வேறு.

ஒரே சமயத்தில் 20 பிரதிகளுக்குமேல் வாங்குவோருக்கு 20% கழிவு.

கிடைக்குமிடங்கள்:—

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில்
ஸ்ரீவைகுண்டம். (*திருநெல்வேலி ஜில்லா*)
2. "தியாகராஜ விலாசம்"
பிள்ளையார் கோவில் தெரு; திருவேட்டீசுவரன்பேட்டை,
திருவல்லிக்கேணி, சென்னை—5.

திருவருட் பயன் – தெளிவுரை

பண்டித வித்துவான் சைவப் புலவர் சித்தாந்த நன்மணி,
திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்கள்,
தமிழ்ப் பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்,

(மலர் 14. இதழ் 6-ன் தொடர்ச்சி)

6. பல்லார் உயிருணரும் பான்மையென மேல்ஒருவன்
இல்லாதான் எங்கள் இறை.

(தெ – ரை) பலவாய் எங்கும் நிறைந்திருக்கும் உயிர்கள் தாமே உணருவனவல்ல; உணர்த்த உணரும் தன்மையன. ஆனல் தனக்கு மேல் ஒருவன் இல்லாத தனித்தலைவனுகிய எங்கள் இறைவனே தானே எல்லாவற்றையும் முற்ற உணரும் தன்மையன் ஆவன் என்பதாம்.

உயிர்கள் அனைத்தும் உணர்த்த உணரும் இயல்பின; ஆனல் இறைவனே தானே எல்லாவற்றையும் முற்ற உணரும் இயல்பினன் ஆவன். 'அறிவிக்கப்படும் சித்து இவன்தான், அவன் தானே அறியும் சித்து' (சிவ-சித்தியார்-320) என்னும் அருள் வாக்காலும் இவ்வுண்மை புலனுகும். உயிர்கள் உணர்த்த உணரும் இயல்பின வாதலின் தமக்கொரு தலைவனை உடையவாயின. இறைவன் அவ்வியல்பினன் அல்லன் ஆதலின் தனக்கொரு தலைவனை யுடையனல்லனுய்த், தானே யாவர்க்கும் தலைவனுக விளங்குகின்றுன் என்பதாம். இவ்வியல்பினன் ஆதலைச் 'சேர்ந்தறியாக் கையான்' என்ற திருவாசகத் தொடரும் விளக்கி நிற்கும்.

7. ஆகு அறிவாய் அகலான் அடியவர்க்கு
வாகுடர் காணுத மன்.

(தெ – ரை) வான நாடரும் அறியொணுத இறைவன், மெய் அன்பர்கள் அறிவின் கண் நீங்காத பேரறிவாய் நின்று, அவர்களை விட்டு அகலான் என்பதாம்.

மெய் யடியவர்களிடத்து அறிவினுள் அருளால் மன்னி விளங்குகின்ற இறைவனே, வானுடர் காண இயலாதவனுக இருக்கின்ருன். இக்குறிப்பினைத் திருவாசகத்துள் பல் வேறிடங் களில் காணலாம். ‘கனவிலும் தேவர்க் கரியாய் போற்றி, நனவிலும் நாயேற் கருளினை போற்றி’ ‘விண்ணேர்கள் ஏத்து’ தற்குக் கூசுமலர்ப்பாதம் தந்தருள வந்தருளும் தேசன்’; செங் கண் நெடுமாலும் சென்றிடந்தும் காண்பரிய பொங்குமலர்ப் பாதம் பூதலத்தே போந்தருளி; பாரார் விசும்புள்ளார் பாதலத் தார் புறத்தார் ஆராலும் காண்டற்கரியான் எமக்கெளிய பேராளன்; இந்திரனும் மாலயனும் ஏனேரும் வானேரும் அந்தரமே நிற்கச் சிவன் அவனி வந்தருளி; வான்வந்த தேவர் களும் மாலயனேடிந்திரனும் கான்நின்று வற்றியும் புற்றெ ழுந்தும் காண்பரிய தான், வந்து நாயேனைத் தாய் போல் தலை யளித்திட்டு; பூமேல் அயனெடு மாலும் புகலரிதென்று ஏமாறி நிற்க அடியேன் இறுமாக்க; திருமாலும் பன்றியாய்ச் சென் றுணராத் திருவடியை உருநாம் அறியவோர் அத்தணனுய் ஆண்டுகொண் டான்; அரிக்கும் பிரமற்கும் அல்லாத தேவர் கட்கும், தெரிக்கும் படித்தன்றி நின்ற சிவம் வந்து நம்மை, உருக்கும் பணிகொள்ளும் என்பது கேட்டுலகமெல்லாம், சிரிக்கும் திறம்பாடித் தெள்ளேணம் கொட்டாமோ; அருமந்த தேவர் அயன் திருமாற்கரியசிவம்; உருவந்து பூதலத்தோர் உகப்பெய்தக் கொண்டருளி’ என்பன அவற்றுட் சில.

இன்னும் எத்தனையோ இடங்களில் இக்குறிப்புக்கள் வரு கின்றன. இங்ஙனம் ஒப்பற்ற கருணை வள்ளலாகிய ஒரு தனி முதலே ஒரு சாரார்க்கு அறிதற் கரியவனுயும், இன்னெரு சாரார்க்கு எளியனினும் எளியனுயும் விளங்குதற்குக் காரணம் என்னை? இவ்வினுவும் விடையும் திருவாசகத்துள்ளேயே காணக் கிடைக்கின்றன. இவர் தேவர் அவர் தேவர் என்று பேசிக் கறுத்து நிற்கும் கவற்சி யாளர்க்கும், ஒராற்ருன் தெளிந்தா ரேனும் அப்பெரும்பொருளைத் தன் முனைப்பால் காண முற்படு

வார்க்கும் அரியனாக விளங்குகின்றான் இறைவன். இவர் தேவர் அவர் தேவர் என்று பேசி இரண்டாட்டா தொழிந்து ஈசன் திறமே பேணிக் கவராதே தொழும் அடியார்க்கும் தொண்ட னேன் நுகருமா நுகரே; விளம்புமாவிளம்பே, காணுமா காணே எனத் தன்முனைப்பற்று விளங்கும் அடியவர்க்கும் எளியனினும் எளியனாய் விளங்குகின்றான் இறைவன். அலரவனும் மாலவ னும் காணாமே' என்று தொடங்கும் திருச்சாழற்பாடல் இவ்வுண் மையை நன்கு விளக்கும்.

8. எங்கும் எவையும் எரியுறுநீர் போல்ஏகம்
தங்கும்அவன் தானே தனி.

(தெ-ரை) எல்லா விடத்திலும், எல்லா உயிர்களிடத்தும் வெப்பமான நீரிலுள்ள சூடுபோல இரண்டறக் கலந்து நிற்பவன் இறைவன் ஆவன். அங்ஙனம் அவற்றினோடு கலந்திருப்பினும் அவற்றில் தொடக்குறாது தனித்து நிற்கும் இயல்பினன் அவ் விறைவன் என்பதாம்.

இறைவன் எல்லாமாய் அல்லவுமாய் நிற்கும் இயல்பினன் என்பது இதன் கருத்து.

9. நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்
சலமிலன் பேர்சங் கரன்.

(தெ-ரை) தன்னையடைந்து வழிபடாதவருக்குத் தனது பேரின்பத்தைக் கொடாதவன்; மெய்யன்போடு வழிபடுவோர்க்கு அவ்வின்பத்தைக் கொடுப்பவன் எனினும் தன்னை வழிபடுவதால் விருப்போ, வழிபடாமையினால் வெறுப்போ உடையனல்லன்; எல்லா வுயிர்களுக்கும் நலத்தைக் கொடுப்பவன் ஆதலால் சங்கரன் (சம்-சுகம்: கரன்-கொடுப்பவன்) என்னும் திருப் பெயரினையுடையவன் என்பதாம்.

வாடைக்காற்றால் வருந்துபவர்கள் தீயினை அணுகின் அக் குளிர் நீங்கப்பெறுவர். அதனை அணுகாதார் நீங்கப்பெறார். அதுபோல இறைவனை அணுகுவார் தமது பிறவித் துன்பம் நீங்கப்பெற்று இன்புறுவர்; அணுகாதார் அது நீங்கப்பெறார்

என்பதாம். பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார், இறைவனடி சேரா தார்' என்ற குறளும் ஈண்டு ஒப்பிட் டுணர்தற் குரியர் தாம்.

10. உன்னும்உள(து) ஐயம்இல(து) உணர்வாய் ஓவாது
மன்னுபவம் தீர்க்கும் மருந்து.

(தெ – ரை) அறிவுக் கறிவாய் நின்று என்றும் பிறவிப் பிணிதீர்க்கும் மருந்தாக இறைவன் இருத்தலின் அப்பெருமானை இடைவிடாது நினைக்கவேண்டும். அதனால் எங்கும் இலாத தோர் இன்பம் நமக்கு உளது ஆகும். இதில் ஏட்டுணையும் ஐயம் இல்லை என்பதாம்.

உணர்வாய் மன்னுபவம் தீர்க்கும் மருந்தினை ஓவாது உன்னும்; (அதனால் நன்மை) உளது; (இது) ஐயம் இலது எனக் கூட்டிப் பொருளுணர்க. மந்திரமும் தந்திரமும் மருந்து மாகித் தீரா நோய் தீர்த்தருள வல்லானாகிய இறைவனை, பிறப்பறுக்கும் பிஞ்ஞகனை இடைவிடாது நினைந்து வழிபட்டா லன்றித் தொல்லை யிரும்பிறவிச் சூழுந்தளை நீக்க இயலாது என்பது கருத்து. 'ஓவாது உன்னும்' என்பதற்கேற்ப, ஓவாது நினைந்து வழிபட்ட பெருமக்கள் நமது சமய குரவர்கள். 'நீளநினைந்தடியேன்; 'நினையாதொரு போதும் இருந்தறியேன்'; பாசம் பரஞ்சோதிக்கு என்பாய்; இராப் பகல் நாம் பேசும்போது எப்போது? என வரும் அவர்களின் அருள்வாக்கால் இவ்வுண்மை புலனாகும். 'கங்குல் பகல் எங்கண் மற்றொன்றும் காணற்க' என்னும் திருவாக்கும் காண்க. ஓவாது நினைத்தல் வேண்டும் என்பதையே அருளாளர்கள் அனைவரும் வற்புறுத்தி யருளினர். 'ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும் உள்ளானை' என்னும், திருவாசகப் பகுதியும் ஈண்டு நினைத்தற்குரியதாகும். இதனாற்றான் பரிமேலழகரும் 'மாணடி சேர்ந்தார்' என்ற பகுதிக்கு உரை வகுக்கும் பொழுது 'சேர்தல்-இடைவிடாது நினைத்தல் என்றும்' 'புகழ் புரிதல்' என்ற பகுதிக்கு உரைவகுக்கும் பொழுது 'புரிதல்–எப்பொழுதும் சொல்லுதல்' என்றும் உரை வகுத்துப் போயினர் எனத் தெரியலாம்.

(தொடரும்)

திருஞானசம்பந்தர்

அற்புதத் திருப்பதிகங்கள்

ஆங்கில மொழிபெயர்ப்பு

திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள், M. A.,
தமிழ் விரிவுரையாளர், காசி இந்துப்பல்கலைக்கழகம் - காசி.

1. Sri Tirugnana Sambandar was born at Sirkali. His parents were Sivapadahrudayar and Bhagawathi. When he was only three he accompanied his father to the temple tank. The father took a dip in the water and the child who was on the bank began crying "O mother, O father. Lord Siva and His divine consort, Parvati, came there and the goddess fed the child with the divine milk, which enabled it to attain the real Knowledge. Since then it was called Tiru Gnana Sambandar (one connected with the divine Knowledge or ultimate knowledge.) His father after completing his bath came up and saw that he had taken milk which some 'strangers' had offered. He was much annoyed at this and demanded from his son the identity of "them". Tirugnana Sambandar opened his mouth and there was born the first hymn of the Tevaram. It was a padigam (Dacad-)

பண் : நட்டபாடை.

"தோடுடையசெவி யன்விடையேறி யோர்தூவெண் மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்த அருள் செய்த
பீடுடையபிர மாபுரம் மேவிய பெம்மானிவனன்றே".

"His ears are beringed; He rides a bull; He adorns His head with the crescent moon; with the ash from the cremation ground is besmeared His body; He is the thief who stole my heart; the great Brahma enthroned on the lotus erstwhile prayed to Him and received His Grace. And He dwells in this Brahmapuram (Sirkali)"

2. After this he began visiting the Saivaite shrines in South India. At Tirukkolakka he received a pair of gold talams (cymbols) by the Divine Grace, with the Panchakshara engraved on them.

பண் : தக்கராகம்.

"மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கை கோலக் காவுளான்
சடையும் பிறையும் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையும் கொண்ட வுருவ மென்கொலோ".

"What a figure is His! His hair is matted; He wears the sacred ash and is with a loin cloth. And He dwells in Kolakka, full of tanks where young women take bath disturbing the silent fish."

3. Sri Tirugnana Sambandar proceeded to Tiru Nelvayil Arathurai. There by the villagers he was presented with a palanquin made of pearls and an umbrella etc; This was done by the Divine command. He praised the Grace of the Lord in a padigam.

பண் : சாதாரி.

"பாடல்மறை சூடல்மதி பல்வளையோர் பாகமதில் மூன்றொர்கணையால்
கூடஎரி யூட்டியெழில் காட்டிநிழல் கூட்டுபொழில் சூழ்பழசையுள்
மாடமழ பாடியுறை பட்டிசரம் மேயகடி கட்டரவினார்
வேடநிலை தொண்டவரை வீடுநெறி காட்டிவினை வீடுமவரே."

"He, who dwells in Patticharam, adorns Himself with the snakes; His word is the vedas; He wears the crescent moon as an ornament; His divine consort is inseparable; He destroyed the three castles with one arrow; He absolves sins and grants us salvation."

4. Sri Tirugnana Sambandar then went to Tiruvaduthurai. There his father expressed his desire to perform a sacrifice (yagna). Sri Tirugnana Sambandar went to the temple and prayed unto God. He was bestowed a purse consisting of 1000 gold coins, which he gave his father.

பண் : காந்தார பஞ்சமம்.

"இடரினும் தளரினும் எனதுறுநோய் தொடரினும் உனகழல்
தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சைமிடறினில் அடக்கியவேதியனே
இதுவோஎமை யாளுமா றீவதொன் றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை யரனே".

Even when I am exhausted, when I face any difficulty and when my Karma (of previous births) poses before me I worship and pray unto thee, my Lord. You are Omnipotent and you had swallowed the poison that came out of the ocean and retained it in the throat. Is this the way you take care of us, your devotees? O, the Lord of Tiruvavaduturai, if you don't have any thing to give us, do you call that Grace?"

5. Sri Tirugnana Sambandar went to Tiru vizhimizhalai and there was famine. He prayed to Lord Siva and was rewarded with a gold coin. This continued for a few days. But unfortunately the

coins were not good ones and as such there was difficulty in getting food grains. So once again he appealed to God and asked for a good coin. And it was granted.

பண் : குறிஞ்சி.

" வாசிதீரவே, காசுநல்குவீர்; மாசின்மிழலையீர், ஏசலில்லையே."

"My Lord of Mizhalai, you are Pure. Give me pure and good coins. Then the world will not abuse you"

6. At Tirumarugal Sri Tirugnana Sambandar came across, near the temple, a young girl who had lost her would-be husband. He died of snake-bite. Sri Tirugnana Sambandar was very much moved by this and prayed to God and brought back the life of the merchant.

பண் : இந்தளம்.

" சடையா யெனுமால் சரண்நீ எனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள்உள் மெலிவே."

"She cries, 'O, my Lord with matted hair, you are my refuge. O, the rider of the bull' I pray unto thee, Lord of Tirumarugal, is it right to leave her in this anguish of heart?"

7. Along with Appar, his elder contemporary, Sri Tirugnana Sambandar went to Vedaranyam. The Vedas themselves worshipped Lord Siva there. Since then the gates were closed for the human beings. At the instance of Sri Tirugnana Sambandar, Appar with his devotional hymns made the doors open. After the worship Appar asked Sri Tirugnana

Sambandar to let the doors close. And the latter did so through a padigam.

பண் : இந்தளம்.

"சதுரம் மறைதான் துதிசெய் துவணங்கும்
மதுரம் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
இதுநன் கிறைவைத் தருள்செய்க எனக்குன்
கதவந் திருக்காப் புக்கொள்ளுங் கருத்தாலே."

"The four vedas worship you, my Lord, dwelling at Tirumaraikkadu. I want your gates to get closed. Kindly grace me and let me do so at once."

8. From Vedaranyam he proceeded to Madurai at the invitation of Mangayarkkarasi, the Queen of the Pandya King, Nedumaran. The King was a jain and the State religion jainism. The jains did not like the presence of Sri Tirugnana Sambandar, a Saivaite in their Capital and so out of jealousy set fire to the mutt in which Sri Tirugnana Sambandar was staying with his disciples. Sri Tirugnana Sambandar understood this and so bade the fire go to the king. And the King was, as a result of this, afflicted with high fever.

பண் : கௌசிகம்.

"செய்யனே திரு ஆலவாய் மேவிய
ஐய னேயஞ்ச லென்றருள் செய்யெனைப்
பொய்ய ராம்அம ணர்கொளு வுஞ்சுடர்
பையவே சென்று பாண்டியற் காகவே."

"Your conplexion is red, O the Lord of Alavay; Free me from fear; The Jains, who follow a false faith have set fire to the Mutt, keeping me in mind. Let this fire go slowly and reach the Pandya King.

(தொடரும்)

காந்தாரப்பண் பதிகங்கள்

கல்வெட்டு ஆராய்ச்சிக் கலைஞர்,
வித்துவான், திரு. சுந்தரரேச வாண்டையார் அவர்கள்,
அண்ணாமலை நகர்.

ஒரு பொருள் எவ்வளவு உயர்ந்ததாயினும் அது ஒரு புலவரால் பாடப்படும் தன்மையுடைமையே சீரிய தன்மையாகக் கருதப்படும். தென்றற்காற்று எத்துணையோ பெருமை வாய்ந்தது. நம் நடராசப்பெருமான் தெற்கு நோக்கியாடுதற் குறிப்பும் அத்தென்றலில் திளைத்தற்பொருட்டே என்பர் பரஞ்சோதி முனிவர். அதனை இளங்கோ வடிகள் 'புலவர் நாவில் பொருந்திய தென்றல்'—என்று அதற்கு ஏற்றம் கூறுகின்றார். அத்தகைமையில் ஒரு புலவர் புகழ்ந்த பெருமையது காந்தாரப்பண். அப்புலவரோ ஒப்பரும் பெரும்புகழ் படைத்த சிவஞானத் திருவினர். அவர் அப்பொருளைப்பற்றி,

"வேந்தாகி விண்ணவர்க்கும் மண்ணவர்க்கும்
நெறிகாட்டும் விகிர்த னாகிப்
பூந்தாம நறுங்கொன்றை சடைக்கணிந்த
புண்ணியனார் நண்ணுங் கோயில்
காந்தாரம் இசையமைத்துக் காரிகையார்
பண்பாடக் கவினார் வீதித்
தேந்தாமென் றரங்கேறிச் சேயிழையார்
நடமாடுந் திருவையாறே"

என்று அருளிய திருப்பாசுரத்தில் கூறியுள்ளார். காந்தாரப் பண்ணிற்குரிய மற்றொரு சிறப்பாவது:— ஒரு பண்ணை ஒருவரே

'திருக்கோயில்' இதழில் வெளிவந்துள்ள இக்கட்டுரை ஆசிரியர் அனுமதியுடன் வெளியிடப் பெறுகின்றது.

பாடியிருப்பர். வேறொரு பண் மற்றொரு நாயனர் திருவாக்கிற் பயிலும். உதாரணமாக மேகராகக் குறிஞ்சி என்னும் பண் திருஞான சம்பந்தப் பெருமான் ஒருவரே பாடியருளியது. திருத் தாண்டகம் அப்பர் பெருமான் ஒருவரே பாடியருளியது. அவ்வாறு இல்லாமல் எம் பெருமக்கள் மூவரும் தமது தேவாரப் பதிகங்களில் இப்பண்ணைப் பாடியிருக்கின்றனரென்ருல், ஏனைப் பண்களிலும் இது சிறப்புடையதென்பது போதருமன்ரே? இன்னும் இப்பண் நாட்டியம் ஆடுதற்கேற்ற இயல் இசை அமைப்பு உடையதென்று, மேற்படி திருவையாற்றுப் பதிகம் அறிவிக்கும்.


காந்தாரம் ஒருவகைப்பண். இப்பொழுது இசை வல்லார்பால் வழங்கிவரும் இராகம் என்ற வடசொல், தமிழில் நுழைவதற்குப் பல நூற்ருண்டுகளுக்கு முன்பே, அப்பொருளில் வழங்கியது பண் என்ற சொல்லேயாம். பண் என்னும் பெரிய இராகத்தில் தோன்றுவது திறன் என்றும், அக்காலத்தில் வழங்கியமை சிலப்பதிகாரம் முதலியவற்ருல் அறியலாம். இக்காந்தாரம் காந்தார பஞ்சமம் என்றும், பியந்தைக் காந்தாரம் என்றும் இரு பிரிவினை உடையதாகும். இசைத்தமிழ்ப் பாடல் ஒவ்வொன்றும் பண் வகைகளில் ஒன்றில் அடங்கும்.

கேட்போர்க்குப் பொருள் விளங்கவும், ஓசையினிமை பெறவும் தாளவொத்து வேண்டும். இலக்கணம் அறியாதவன் இயற்றமிழ்ப் புலவன் ஆகாதவாறுபோல, தாளம் பிழை படப் பாடுவோன் இசைத்தமிழ்ப் புலவன் ஆகான் என்னப் படுவான். இசைக்குத் தாளம் இன்றியமையாதது. அதனுல் தாளம் தாய், சுதி தந்தை என்னும் வடசொற் பழமொழி யொன்றும் வழங்குகிறது. இவ்வகையால் இசைத்தமிழ்ப் பாடல்களைக் கருத்து விளங்குதற்கும் செவி இன்பத்துக்கும் ஏற்கத் தாளவொத்து அறுத்துப் பாடுவதற்குக் 'கட்டளை' என்று பெயர். சாதாரணத் தமிழில் பல்லோர் கூறும் வர்ணமெட்டு என்பதுவே இக்கட்டளை என்பதன் பொருளாம். நமது நாயன்மார் பாடியருளிய பாசுரங்களின் பண்கள் ஒவ்வொன்றும் இத்தனை கட்டளை யுடையன என்று திருமுறை கண்ட புராணம் உணர்த்தும். உதாரணமாகச் சம்பந்த மூர்த்தி நாயனர் பாடியருளிய குறிஞ்சிப்பண்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால்
நிறுவப்பெற்ற புதுடில்லியில் ஸ்ரீவிநாயகர் சுப்பிரமணிய மந்திர் தேவாரநிதியிற்கண்ட வண்ணம்
புதுடில்லியில் 29-4-1963 உ நடைபெற்ற திருமுறைத் துவக்கவிழா



A. No. 10693



திரு O. V. அழகேசன் அவர்கள் (Union Minister for Irrigation and power) புதுடில்லி திருமுறைத் துவக்க விழாவில் சிறப்புரை வழங்குகிறார்கள்.

ஐந்து கட்டளையை யுடையது. சுந்தரமூர்த்தி நாயனர் அக் குறிஞ்சியில் இருவகையே (இரண்டு கட்டளைகளே)பாடியருளினர் என்கின்றது.

இனி அப்பர் பெருமான் திருவாக்கில் உதித்த காந்தாரத்தில் ஆறு பதிகங்கள் வருகின்றன. அவைகளில் 'சுண்ணவெண் சந்த னச்சாந்தும்', 'மாதர்ப்பிறைக் கண்ணியானை', 'பாடிளம் பூதத்தினுனும்', எனத்தொடங்கும் மூன்று பதிகங்களும் ஒரு கட்டளையாகவும், "மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த", 'வனபவள வாய் திறந்து' எனத்தொடங்கும் இரண்டு பதிகங்களும் ஒரு கட்டளை யாகவும், 'கரவாடும் வன்னெஞ்சர்க்கரியானை'எனத் தொடங்கும் பதிகம் ஒரு கட்டளையாகவும், ஆக மூன்று கட்டளைகளாக அமைந்துள்ளன. இவை திருமுறை கண்ட புராணத்தில் உய்த் துணரவைப்பாகவும், உரையிற் கோடலாகவும் அமைந்துள்ளன.

காந்தாரத்தில் வரும் பதிகங்கள் ஆறிலும் நமது அப்பர் பெருமான் உபதேசித்தருளிய பொருள்களிற் சில காண்பாம்.

முதலாவது சுண்ணவெண் சந்தனச்சாந்து என்பது. இதில் ஒவ் வொரு பாசுரத்திலும் 'உடையார் ஒருவர் தமர் நாம் எதற்கும் அஞ்சவேண்டுவதில்லை. எவையும் நம்மை அச்சுறுத்தவாரா' என்பதாம். அஞ்சற்க என்பதற்கு அடையாளமாகச் சிவபெரு மான் திருமேனியிற் காணும் கோலங்களேயாம். அவற்றை எம்பெருமான் தன்னுடைய அழகுக்காகவோ அல்லது பிறர் பாராட்டற்கோ அணிந்திருப்பான்? அல்லது யாதொரு பயனும் யாதொரு கருத்துமின்றி அணிந்திருப்பான் எனில்,

"பொய்படு மொன்றோ புனைபூணுங் கையறியாப்
பேதை வினைமேற் கொளின்"

என்ற பொய்யாமொழிப்படி நெடுநாளைக்கு முன்பேயே அக் கோலங்கள் மாறியிருக்க வேண்டும். ஆகையால் எம்பெருமான் கோலங்கள் ஒவ்வொன்றும் பல உண்மைகளை நமக்குத் தெருட்டுனவாக உள்ளன. இவ்வுண்மை அறிந்து நமக்கு அருளியவர் நமது அப்பமூர்த்திகளே யாவர். அவர், எதற்கும் பயங்கொள்ளிகளாயுள்ள பேதை மாந்தரீர்! அஞ்சன்மின் என்று

அவனுடைய அடையாளங்கள் ஒவ்வொன்றையும் நமக்கு எடுத்துக்காட்டுகிருர்.

சுண்ணவெண் சந்தனச் சாந்து:— அவன் மேனியில் எங்கும் திருநீற்றுப் பூச்சுக் காணப்படுகிறது. அது என்ன விளக்குகிறது? அதனை மணிவாசகப் பெருமான் திருக்கோவையாரில் "தொழுதெழுவார் வினைவளம் நீறுஎழ நீறணி அம்பலவன்" எனக் கூறியருளியபடி வேறு எவ்வாற்ருனும் மாய்தற்கரிய வினையை மாய்த்துச் சாம்பராக்குபவன் தான் ஒருவனே என உணர்த்துகிறது.

திங்கட் சூடாமணி:— அது உச்சியில் அணியும் பிறைக்கொழுந்து. மாபாதகம் புரிந்தாரேனும் சரண்புகில் தூயராக்கி ஏற்றுக்கொள்கிறவன் தான் ஒருவனே என்பதை விளக்குகிறது.

புலித்தோல்;— எவற்றையும் கொல்லும் புலியைக் கொன்று அதற்கு அடையாளமாகத் தோலை அணிந்திருப்பது அன்பர்களுக்குத் தீமை செய்யவரும் கொடியோரை ஒழிப்பவன், தானே என்ற கருத்து.

பவளநிறம்:— அது செந்நிறம். அக்நியின் நிறம் செந்நிறம் என்று சொல்லப்படுகிறது. ஆகவே உலகத்துக்குச் சங்கார கர்த்தா எவனே அவனேதான் உலகிற்கு முழுமுதற் கடவுளாக இருக்கமுடியும் என்னும் சிவஞானபோதக் கருத்தை அடக்கியதாகும். அனைத்தையும் அழிக்கவல்லது நெருப்பு ஒன்றே. அந்நெருப்பே சிவனது மேனியும் நிறமும்.

ஏறு:— எவ்வளவு வலிமையுடையனுயினும் அவனிடத்து அறம் இல்லையேல் அத்தனையும் பயனற்றதாகும். ஆதலின் எம்பெருமான் அறத்தையே ஊர்தியாகவும், கொடியாகவும் கொண்டுள்ளான்.

அரவு:— தனக்குத் தீங்கு இழைக்க வருபவர் எனினும், தன் சந்நிதியிற்பட்ட மாத்திரத்தில் எல்லாத் தீமையும் நீங்குவர். தம்மால் ஏற்றுக்கொள்ளப்படும் பொருளும் ஆவர் என்பதனைப் பாம்பணி யுணர்த்தும்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் எனப்பெயர் பூண்டு அங்கு இறைவன் எழுந்தருளி யிருப்பான். அவையனைத்தும் சிவசொரூபமே என்று கொண்டு வழிபடுபவர்க்கு அஞ்சுவது யாதொன்றுமில்லை. இங்குத் தீர்த்தமே இறைவன் வடிவம் என்பதற்குச் "சென்றாடு தீர்த்தங்கள் ஆனார்தாமே" (திருத்தாண்டகம்) என்று அடிகளார் வாக்கே சான்று. இங்கே கெடிலப்புனல் என்று சொன்ன உபலக்கணத்தாலே எஞ்சியதலமும் மூர்த்தியும் கொள்ளப்படும். ஆக என்னை அமணர் தொடக்கினின்று எடுத்தாண்டருளிய வீரட்டானப் பெருமானும், அவன் எழுந்தருளிய இடமாகிய திருவதிகை வீரட்டானமும், அத்தலத்திற்கு அழகு செய்யும் திருக்கெடிலமும், மூ ன் று ம் சிவசொரூபமாகலின் அவையும் நம்மை அஞ்சற்க என்பனவாம். ஆகலின் மேற்கூறிய திருநீறு முதல் திருக்கெடிலப் புனல் வரையுள்ள எம்பெருமானுடைய உடைமைகள் ஒவ்வொன்றும் நம்மை அச்சத்தினின்று மீட்பன என்பது இப்பதிகக் கருத்தாம். இது ஒரு பாசுரத்தின் கருத்து. ஏனையவும் இங்ஙனே விரித்துக்கொள்க.

அடுத்த பதிகம் மாதர்ப்பிறைக் கண்ணியானை என்பது :—

இது ஐயாற்றில் நமது அப்பர்பெருமான் கண்ட கயிலைக் காட்சியைக் குறிப்பதாம். அது 'வேத முதல்வன் ஐயாற்றில் விரவுஞ் சராசரமெல்லாம் துணையொடுங் கூடக் கண்டேன் எனப் பாடி நின்றார்' என்று சேக்கிழார் பெருமான் கூறுவதற்கு உதாரணங்களாக உள்ளவை.

அடுத்த பதிகம் திருவாரூர்ப்பதிகம் "பாடிளம் பூதத்தினானும்" என்பது :— அப்பதிகத்தில் கூறப்படுவன:- நமது அப்பர் பெருமான் மற்றோரிடத்தில் கூறியருளிய "திருநாமம் அஞ்செழுத்தும் செப்பாராகில் தீவண்ணர் திறமொருகால் பேசாராகில்"— என்று குறிப்பிட்டருளியபடி, அடியார்கள் தேவதேவன் சிவன் பெருந்தன்மையைக் கூறும் முறை இவையெனக் காட்டுவனவாக அமைந்த கருத்தையுடையன. எனவே இப்பதிகத்தை நாடோறும் ஓதி வருவார்களாயின் தீவண்ணர்திறன் ஒருகால் பேசிய பயன் எய்துவர், என்பது உறுதி. எனவே மாந்தர் உய்தி கூடற் கருத்தானே எழுந்ததாகும் இப்பதிகம்.

இதில் ஒவ்வொரு பாசுரத்திலும் சில சிறந்த கருத்துக்கள் அமைந்துள்ளன. "பையஞ் சுடர்விடு நாகப்பள்ளி கொள்வா னுள்ளத் தான்"— என்பது தல வரலாறு குறிப்பதாகும். அவ் வரலாறு திருப்பாற்கடலில் திருமாலின் இதயத்து வைத்துப் பூசிக்கப் பெற்று அப்பூசை கொண்டருளிய தியாகராசப் பெருமான் முசு குந்தச் சக்கரவர்த்தியின் முயற்சியால் இறுதியாகத் திருவாரு ரில் எழுந்தருளினுர் என்பதாம். இதனை அப்பதிகத்தின் பகுதி குறிப்பதாகும்.

"ஐயஞ்சின் அப்புறத்தானும்"— என்பது சித்தாந்த சாத்திரக் கருத்தை அடக்கியதாம். தத்துவ சொருபியாகச் சிவபெருமான் இருக்கிறுர் என்பதும்; அத்தத்துவங்கள் ஆத்ம தத்துவம், வித்தியா தத்துவம், சிவதத்துவம் என்று மூன்ருகப் பிரிபட்டு முறையே இருபத்துநான்கு, ஏழு ஐந்து என வகுக்கப்பட்டு முப்பத்தாறு தத்துவங்களாக உள்ளன. "ஐயஞ்சின் அப்புறத் தான்" என்பதில் ஆன்ம தத்துவம் இருபத்து நான்கும், ஏழு பிரிவாகிய வித்தியா தத்துவம் ஒன்றையும் கூட்டில், இருபத் தைந்து ஆகிறது. இதற்கு மேலுள்ளது சிவ தத்துவம். அதற்கு அதிபதி சிவ பெருமானே என்னும் தத்துவ உண்மையை இவ் வரி விளக்குகிறது.

நரியைக் குதிரை செய்வானும் என்பது :— மாணிக்கவாசகர் மூவர்க்கும் முந்தியவர் என்பதைக் குறிக்கிறது. நவீன ஆராய்ச் சியாளர் கூறுகிறபடி மூவர்க்குப் பிற்பட்டவர் அல்லர் என்ப தற்கு இதுவே போதிய சான்து. நரியைக் குதிரை செய்தல் போன்ற ஆற்றல் திறனில் சிவபெருமான் வல்லுநன் என்பதை உணர்த்தற்குக் குதிரை செய்வான் என எதிர் காலத்தாற் கூறினுர். அதைத் தொல்காப்பியத்தில் வினையியலில்,

" முந்திலைக் காலமும் தோன்றும் இயற்கை
எம்முறைச் சொல்லும் நிகழும் காலத்து
மெய்ந்நிலைப் பொதுச்சொற் கிளத்தல் வேண்டும்."

என்ற சூத்திரத்தால் அறிக. திருக்குறுக்கைத் திருநேரி சையில் "கூற்றினைக் குமைப்பர் போலும்" "எலிக்கு நிறைகடல்

மண்ணும் விண்ணும் நீண்ட வானுலகமெல்லாம் குறைவறக் கொடுப்பார் போலும்' என்பவற்றிற்போல இங்கே எதிர்காலத் தாற் கூறினர்.

பழமொழி குறித்த காந்தாரப்பண் திருவாரூர்ப் பெருமான்மீது பாடப்பட்டதாகும். அதில் கனியிருப்பக்காய் கவர்ந்தது, முயலை விட்டுக் காக்கைபின் போனவாறு, அறமிருக்க மறம் விலைக்குக் கொண்டவாறு, பனி நீரால் பரவை செயப்பாவித்தல், ஏதன் போர்காதனாய் அகப்படுதல், இருட்டறையில் மலடு கறந்து எய்த்தவாறு, விளக்கிருக்க மின்மினித் தீக்காய்ந்தவாறு, பாழூ ரிற் பயிக்கம்புக் கெய்த்தவாறு, தவமிருக்க அவஞ்செய்து தருக் கல், என்னும் பழமொழிகள் வந்துள்ளன.

பழமொழிகளைத் தம்முடைய நூலில் வைத்துப் பாடுவதை நமது வாகீசப் பெருந்தகையாரிடத்தில் காண்கிறோம். படிக் காசுத் தம்பிரான் தண்டலையார் சதகத்தில் பழ மொழிகளை வைத்து நீதிகளைக் கூறுகிறார்.

இவ்வழக்கம் பழங்காலத்தே இருந்து வந்தது என்பதற்குப் பழமொழி என்னும் பதினெண் கீழ்க்கணக்கைச்சார்ந்த நூலே சான்றாகும். இப்பழமொழிகள் சைவநெறி இருப்பவும் அதைச் சார்ந்து முத்திபெறாது, பிறநெறியைச் சார்வாரை நோக்கிக் கூறியதாம். மேற்குறித்த பழமொழிகளில் இருட்டறையில் மலடு கறந்து எய்த்தவாறு, விளக்கிருக்க மின்மினித்தீக் காய்ந்த வாறு, கரும்பிருக்க இரும்புகடித் தெய்த்தல் என்னும் இம் மூன்றும் உமாபதி சிவத்தால் சேக்கிழார் புராணத்தில் சிவ கதையைப் படிக்காமல் சமண் கதையைப் படித்துக் காலம் கழிப்பது வீண் என்பதற்கு எடுத்தாளப்படுகின்றன.

இப்பழமொழிகளுக்கு விளக்கம்

முயல்விட்டுக் காக்கைப் பின் போனவாறு: புதரில் முயல்கள் இருக்கின்றன. அதற்குக் கண்ணிகுத்தினால் எளிதிலும் பற்றிக் கொள்ளலாம். வேடனுக்கு நல்ல உணவுமாகும். அதற்குப் பதிலாகக் காக்கைக்கு கண்ணி குத்தினால் பறக்கும் பறவை கண்ணிக் குள்ளே இலேசில் அகப்படுமா? அப்படி அகப்பட்டா

லும் நல்ல உணவாகுமா? அருகிலுள்ள புதரில் இருக்கும் முயலைப் பற்றி நினையாமல் பறக்கும் காக்கை இருக்கும் இடம் தேடிப் போன பேதை செயல் இது ஆகும்.

மலடு கறந்து எய்த்தல்: கறவைப் பசு இருக்கவும் அதைக் கறக்கக் கருதாமல் மலட்டுப் பசுவைக் கறந்து கைஇளைப்பவன் செயல்போல் பரிதபிக்கத்தக்கதாகும்.

பனிநீரால் பரவை செயப்பாவித்தல்: மேற்கொண்ட காரியத் துக்குக் கருவியாக மாட்டாத ஒருபொருளைக் கொள்ளின் அது நகைத்தற்கு இடமாம் என்பது அதன் கருத்து.

ஏதன் போர்க்கு ஆதனும் அகப்பட்டேன்: ஒரு பொருளைத் திருடினவன் கையும் களவுமாக அகப்பட்டுக் கொண்டபோது, அவன் எவ்வாறு மீள முடியாதபடி வருந்துவானோ அது போல் சைவநெறியில் நிற்றல் அல்லாமல், பிற நெறியில் சென்றதனால் அவ்வாறு அகப்பட்டுத் தயங்குகின்றேன் என்பது கருத்து.

பாழூரிற் பயிக்கம்புக்கு எய்த்தவாறு: குடியில்லாத ஊரில் பிச்சைக்குப்போய்ப் பெறாமல் வருந்துதலைப் போல் என்பது பொருள்.

அடுத்துத் திருக்கழிப்பாலைப் பதிகம்: வனபவளவாய் திறந்து என்பது காதலுற்று வருந்தித் தன் அளவில் பிதற்றிக்கொண்டிருக்கும் தலைவியின் நிலைமையை உணர்ந்த செவிலி கூற்றாக உள்ளன இப்பதிகத்தின் பாடல்கள். தலைவி பிதற்றுவதும், சிவபெருமானது உருவத் தோற்றங்களே யாகியிருத்தலாலும், தலைவி திருக்கழிப் பாலையினள் ஆகலாலும், ஊர் வலம் வருங்கால் திருக்கழிப்பாலைச் சிவபெருமானைக் கண்டு காமித்தாளோ என்று செவிலி ஐயுற்றுக் கூறுகின்றமை இதன் கருத்து. இப்பதிகத்தின் உள்ளுறை, ஆன்மா சிவனருட் பெருக்கில் திளைத்து நின்ற தன்மையைக் கூறியவாறும். வேறு ஒன்றும் பிதற்றாது தலைவி சிவன் திருவுருப்பொலிவு விசேடங்களையே கூறுகின்றனள் என்றதன் கருத்து "பரமே கண்டிருப்பர் பதார்த்தங்கள் பாரார்' என்ற சாத்திரக் கருத்தை உணர்த்துவதாகும்.

அடுத்தது கச்சியேகம்பம்: கரவாடும் வன்னெஞ்சர்க்கு என்பது: இப்பதிகத்தின் ஒவ்வொரு பாசுரமும் இறைவனைத் தன் மனத்தில் வைத்துக்கொண்டதாகக் கூறப்படுகிறது. செயற்கரிய எக்காரியங்கள் செய்யினும் செய்யலாம். மனத்தை ஒரு வழிப்படுத்தலும், அதன்கண் இறைவன் திருவுருவை நிலைநாட்டலும் எவர்க்கும் இயலாத காரியம். இதனைத் தாயுமானுர் 'கண்மூடி ஒரு கணம் இருக்கவென்ருல் பாழ்த்த கன்மங்கள் போராடுதே' என்று தெரிவிக்கிருர். அவ்வரிய செயல் தமக்கு எளிதில் வாய்த்ததை அடிகளார் பாராட்டுவது இப்பதிகம். இனி இறைவனைப் பலபடப் பாராட்டிக் கூறியிருக்கும் ஒவ்வொரு பாடல்களும் நிரம்பிய பொருண்மையுடையன எனலை ஒரு உதாரணத்தால் காண்பாம். அது 'எப்போதும் இனியானை' என்பது. நாம், மாந்தர் பலரோடு பழகி வருகிருேம். சில சமயம் இருந்த நிலைமை அடுத்த நிமிடத்தில் அவர்க்கு மாறியிருப்பதும், அந்நிலைமையும்போய் வேறு தோன்றியிருப்பதும் கண்கூடாகக் காண்கிருேம். அதற்குக் காரணம் பரிமேலழகர் கூறுகிறபடி ஒரு பகற்பொழுதிலேயே மாந்தர்க்கு முக்குணமும் மாறி மாறி வரும் என்பதாம். குணங்கள் கடந்த எம்பெருமான் எப்போதும் ஒரு படியாக இருப்பான் என்பதைக்குறிக்கத்தான் எப்போதும் இனியான் என்று கூறினுர் போலும்.

திருக்கோவையார் புதிய பதிப்பு

★

(பேராசிரியர் உரையும் பழைய உரையும் கூடியது)

784 பக்கம் வெள்ளைத்தாள். அடக்கவிலை

தனிப்பிரதி விலை ரூ. 2-90

(தபால் கட்டணம் வேறு)

ஒரே சமயத்தில் 20 பிரதிகளுக்கு மேல் பெறுவோருக்கு

20% கழிவு உண்டு

திருவருட்பிரகாச வள்ளலாரென்னும் சிதம்பர இராமலிங்க சற்குரு புலம்பற்கண்ணி*

தொகுத்தவர், திரு. P. P. துரைசாமி அவர்கள்,
கோயமுத்தூர்.

[மலர் 14. இதழ் 6-ன் தொடர்ச்சி]

திருவருட்பா நன்னூலைத் — தேசமெலாம் ஏத்தி
மருவிருட் பாடேக — வழுத்தியருள் சற்குருவே. 31

ஒழிவிலொ டுக்கநூல் — உற்ற முதற்பாட்டுக்
கழிவில் விருத்தி — அருளியவென் சற்குருவே. 32

ஒழிவிலொ டுக்கநூற் — குற்றவுரை யோடே
அழிவிலெ ழுதாவெழுத்தாம் — அச்சிலிட்ட சற்குருவே. 33

செல்வநிறை சென்னைவிட்டுச் — சென்றே சிவதலங்கள்
பல்வகைய பாமாலை — பாடியருள் சற்குருவே. 34

அவிமாரு அந்தணர்வாழ் — அம்பலத்திற் சென்று
கவிமாலை யுள்ளங் — கரையவருள் சற்குருவே. 35

தென்பாற் புகலிவேளூர் — செல்வ வாரூரிற்சென்
றன்பால ருட்பா — அருளியவென் சற்குருவே. 36

கருக்குழி சேராத — கருத்துடையோர் வாழும்
கருங்குழியிற் சின்னாட் — களித்திருந்த சற்குருவே. 37

பன்னியநற் சிற்றம் — பலஞானிக்கே பரிந்து
"நின்னிய" லென்னும்பா — நிகழ்த்தியவென் சற்குருவே. 38

கலக்க முற்றேமாக்கக் — கணக்கிலவ தானிக்
கிலக்கணப் பத்திரிகை — யேகவிட்ட சற்குருவே. 39

பண்பாரு மன்னேன் — பகர்ந்த "தகரவரி"
வெண்பாவுக் கீருரைசெய் — விற்பனவென் சற்குருவே. 40

(தொடரும்)

*திரு. ச. மு. கந்தசாமி பிள்ளை யவர்கள் இயற்றியது.

திருமுறையும் வாழ்க்கையும்

வித்துவான்.
திரு. நடேசநாராயணன் அவர்கள்.
தமிழாசிரியர் கழக உயர்நிலைப் பள்ளி
வாலாசாபாத் (P. O.)

மன்னடியார் உள்ளில் மகிழ்ந்துறையும் பெம்மானே
நின்னடியே போற்றிடு மென் நெஞ்சு
அருளுடைய கவியரங்கத் தலைவ ரேறே
அவைசார்ந்த சான்ருேரே பெரியோ ரேநற்
பொருளுடைய செல்வர்களே நற்ருய் மாரே
பொலிவுடைய இளைஞர்களே வணக்கம் ஈண்டுத்
"திருமுறையும் வாழ்க்கையும்" என் ருேர்த லைப்பில்
செப்புகநற் கவியாலே என்று சொன்னுர்
தெருளுடையீர், தெருளடையா என்றன் பாட்டில்
சிறுமையொழித் தருமைகொளீர் செப்பு கின்றேன். 1

வாய்மை தவமறிவு வண்மை புகழின்பம்
தாய்மை மிளிரன்பே சார்தலினல் — தூய்மையுறு
சைவமே மண்மீதில் சால்புடைத்தாம் என்றமையால்
உய்வமே ஓம்பியதை ஓர்ந்து. 2

எழுத்தைந்தே உயிராக
எழினீறே உடம்பாக
இணைந்து தோன்றிக்
கழுத்தினிலும் சிரசினிலும்
கவின்செய்யும் சிவமணியே
கட்டுஞ் தூசாய்

திருக்கழுக்குன்றத்தில் 1963 ஆனித் திங்களில் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தினர் 18ஆம் ஆண்டு ஆனி மகத் திருமுறைப் பெருவிழா நடத்திய ஞான்று 24—6—63 அன்று தவத்திரு. குன்றக்குடி அடிகளார் தலைமையில் நடந்த கவியரங்கத்தில் பாடியளிக்கப்பட்ட பாக்கள்.

வழுத்து "திரு முறை" மொழியாய்
வாய்த்தவளாம் சைவமகள்
வாழ்வில் நம்மைப்
பழுத்தபழச் சுவையருளால்
பாலிப்பாள் அன்னாளைப்
பணிவோம் நாமே. 3

மண்ணினிலே நல்வண்ணம் வாழ்ந்திடுதற் காக
வழிகாட்டும் காரணத்தால் திருமுறைகள் எல்லாம்
எண்ணிடிலே மனிதர்க்கு வாழ்வியல்நூல் என்றே
ஏற்றமுடன் இயம்பிடலாம் இதிலையம் இல்லை
விண்ணினிலே சுடரிருந்து வியனுலகத் திருட்டை
விலக்கிடல்போல் திருமுறைகள் அனைத்தையுமே நந்தம்
கண்ணினிலே பாவை யெனக் கருத்தினிலே கொண்டால்
கடிதோட்டும் அகத்திருட்டைக் களிப்பூட்டும் நன்றே. 4

திருமுறைகள் வாழ்வளிக்கும் எனுமுண்மை தன்னைத்
தேவாரப் பதிகங்கள் அனைத்திலுமே ஈற்றில்
திருஞான சம்பந்தர் சுந்தரரும் நன்றே
தெரிவித்த உறுதியினால் தெளிந்திடலா மன்றோ?
தெருளுடைய வாழ்வுக்காம் கருத்தடைவு நூலாம்
தெய்வமணங் கமழ்கின்ற திருமுறைகள் தாமே
அருளினையும் பொருளினையும் அனைத்தினையும் என்றும்
அடைந்திடலாம் திருமுறையை அறிந்தோதி னாலே. 5

அன்பூட்டும் அருளூட்டும் அறந்தானும் ஊட்டும்
அகந்தூய்மை பெற்றிடவே பண்பனைத்தும் ஊட்டும்
தென்பூட்டும் திறமூட்டும் தீரமதும் ஊட்டும்
தெளியாத மனத்திற்கும் தெருளூட்டும் கண்டீர்
துன்பூட்டும் பிறவியெனுந் துயர்க்கடலைத் தாண்டும்
தோணியையும் ஊட்டும்உடன் தோற்றமுறும் வீடாம்
இன்பூட்டும் அனைத்தையுமே இசைந்தூட்டும் என்றும்
இறவாத திருமுறைகள் இயைந்தோது வார்க்கே. 6

ஐந்தெழுத்தைப் படைக்கலமாய்
அருள்நெறியை நல்லுணவாய்
அளித்துத் தக்க
மைந்தளித்து மகிழ்வளித்து
மாசகல மருந்தளித்து
வாழ்வ ளிக்கும்
பைந்தமிழின் திருமுறையைப்
பகுத்தறியும் மக்களெலாம
பணிந்து பாடின்
உய்ந்திடுவர் உலகினிலே
உயர்நிலையும் எய்திடுவர்
உண்மை யீதே. 7

கயிறறுந்து தனித்திழிந்த காற்றாடி யாகிக்
கடிவாளம் அறுந்திட்ட பரியாகி மத்தால்
தயிருடைந்து கலங்குதல்போல் உள்ளமுடைந் தெங்கும்
தாவுகின்ற எண்ணத்தால் தகுகொள்கை யற்றுச்
செயிருறைந்த செயல்பலவும் நாடோறும் ஆற்றிச்
செகத்தினிலே துயருற்றும் சிறிதுமுண ராது
வயிறடைக்கும் மக்களெலாம் மனமடங்க நன்றே
வழுத்திடிலோ திருமுறையை வளரின்பந் தானே. 8

முன்னோரிங் கன்பறனே இல்வாழ்க்கை என்றால்
முகிழ்க்கவவை அறிவுறுத்தும் திருமுறைகள் நன்றே
இன்னாச்சொல் அவாவெகுளி அழுக்காறு நான்கும்
இழுக்காக இயன்றதுதான் அறவாழ்வு என்றால்
பின்னாக அவையொழிய அறிவுரைகள் கூறிப்
பேருலகில் வாழ்வாங்கு வாழ்ந்திடச்செய் தெங்கும்
மன்னாக விளங்குகிற தெய்வத்துள் வைத்து
மதித்திடவும் செய்திடுமித் திருமுறைகள் தாமே. 9

நிறைமொழிசேர் மாந்தரவர் ஆணையினிற் றோன்றி
நிலைத்த"திரு முறைக"ளெனும் மந்திரத்தி னாலே
குறைமதியோ ரிடமிருந்தே நிறைமதியை ஈர்த்துக்
கொள்கின்ற திறம்பெறலாம்; நாயன்மார் தங்கை

உறைகயிருந் திருமுறையின் பிணைப்பின்றேல் மேலே
உயர்ந்துபறந் துலாவந்த பட்டமொத்த மக்கள்
திறமின்றிக் கீழிழிந்து வீழ்ந்திடுவர் கண்டீர்
செப்பிவிட்டேன் இனியேனுந் திருமுறைகற் றுய்வீர். 10

ஆற்றினிலே வெள்ளமது மிகவந்த போதும்
அதிற்படகை உய்த்ததுவும் திருமுறையாம் பாட்டே
கூற்றுன முதலையகத் திறந்தமகன் தன்னைக்
குளிரருளால் மீட்டதுவும் திருமுறையாம் பாட்டே
தோற்றிழந்த பொன்மணிபூண் துகில்தன்னை மீண்டும்
தொண்டர்க்கே அளித்ததுவும் திருமுறையாம் பாட்டே
சீற்றமிகு நாகத்தால் பிணமானுேன் தன்னைச்
சிரித்தபடி எழுப்பியதும் திருமுறையாம் பாட்டே. 11

கடலினிலே கல்மிதக்க வைத்ததுமிப் பாட்டே
கதவுதிறந் ததுமிந்தக் கண்ணளித்த பாட்டே
உடலழிக்க ஓடிவந்த யானையையும் மக்காள்!
உடன்தொழுது திரும்பிடவும் செய்ததுமிப் பாட்டே
விடமொழித்த பாட்டும்நல் மழைகொணர்ந்த பாட்டே
விமலனையே சோறளிக்க வைத்ததுமிப் பாட்டே
இடமடையும் நீற்றறையாம் சிறையினின்றும் நீக்கி
இடரொழித்த(து) இத்தெய்வத் திருமுறையாம் பாட்டே. 12

எரித்தெடுத்த எலும்பினையும் எழில்மிக்க பெண்ணுய்
எழச்செய்து காத்ததுவும் ‘மட்டிட்ட’ பாட்டே
சிரித்தெரித்த சிவனையுமே தூதுபோதல் போன்ற
செயல்செய்ய வைத்ததுமித் திருமுறையாம் பாட்டே
அரித்தெடுத்த முயலகனை அழித்தொழித்தே வாழ்வை
அரிவைக்(கு)அன்(று) அளித்ததுவும் திருமுறையாம் பாட்டே
விரித்துரைப்பின் மிகநீளும் திருமுறையே வாழ்வில்
விழைந்ததெலாம் அளிக்கின்ற விழுச்செல்வ மாமே. 13

படருக்குத் துடுப்பேபோல் பாய்ந்துயர்ந்து செல்லும்
பறவைக்குச் சிறகேபோல் உரிமையுடை நெஞ்சை
அடகுக்கு வைத்திட்ட இளைஞர்களே உங்கள்
அருமைமிகு வாழ்வுக்குத் திருமுறையே வேண்டும்

இடருக்கே ஆளாகா(து) ஆனந்தம் வேண்டின்
இதயத்தை மீட்டிடுவீர் இப்போதே சொன்னேன்
தடையின்றித் திருமுறையாம் அருளார்நீர் பாய்ந்தால்
தகுபுலனும் பயிர்செழிக்கும் உயிர்சிறக்குந் தானே! 14

அம்முதலீ ராருவி அருந்தமிழ்மொ ழிக்கே
அடிப்படையாய் அமைந்ததுபோல் அருட்சைவத் திற்கு
நம்முதலாம் திருமுறைகள் பன்னிரண்டும் மக்காள்
நல்லுயிராய் விளங்கிடலை நன்றுள்ளிப் பாரீர்
எம்முதலும் இனிவேண்டாம் திருமுறையால் வாழ்வை
இனிதாக நடத்திடலாம் என்றென்றும் நன்றே
தம்முதலை இழந்தவரிங்(கு) ஆக்கமெய்தார் போலே
தமிழ்முறையை மறந்தவர்நல் வாழ்வுமெய்தார் மன்னே. 15

ஆட்சியினர் சட்டங்கள் புறச்சட்டம் என்றால்
அருஞ்சமயத் திருமுறையே அகச்சட்டம் ஆகும்
காட்சிபெறும் செயலொ ழுங்கைப் புறச்சட்டம் காக்கும்
கருத்திலுறு நினைவொழுங்கை அகச்சட்டம் காக்கும்
நீட்சிபெறும் நினைவாலே செயல்நடப்ப தாலே
நினைவையொழுங் காக்கிடிலோ செயலும் ஒழுங்காமே
மாட்சிமையீர் சைவத்தின் திருமுறையாம் சட்டம்
மன்பதையில் நிலவிடிலோ மகிழ்வமைதி யோங்கும். 16

ஆறறிவு என்றாலே வழியறித லர்கும்
அவ்வழியோ திருமுறைகள் அளித்திடுநல் வழியே
வேறறிவு பிறிதில்லை வீண்முயற்சி வேண்டா
விளக்கமுற உணர்ந்திடுவீர் ஐந்தறிவாம் மக்கட்(கு)
ஆறறிவாய் நின்றிலங்கி அகந்திருந்து மாறு
அருங்கருத்தைக் கொண்டதுநம் திருமுறைகள் தாமே
[1]பேறறிவு நல்குமிதைப் பகலிரவாய் எண்ணிப்
பிரியமுடன் பாடிடிலோ வாழ்க்கைநல மாமே. 17

---

[1] *பேறறிவு – அறிவுப் பேறு.*

கண்டு கொண்ட அழகு

வித்துவான். திரு. வெ. சுப்பிரமணியன் அவர்கள்
தமிழாசிரியர்.
ஸ்ரீ வெங்கடகிருட்டிண உயர்நிலைப் பள்ளி,
கணியூர், கோவை.

மலர்கள் நிறைந்த மணங்கமழும் சோலைகள். மலைக் குன்றுகளின் கூட்டமும் மணற்குன்றுகளின் ஈட்டமும் ஆன சூழல். புனிதத் தன்மை வாய்ந்த நீரோட்டமுள்ள ஆறு. இவற்றிடைய வானளாவிய மரங்கள் செறிந்த மலைச்சரிவு. அங்கு ஐந்து ஆலமரங்களின் தொகுதி எஞ்ஞான்றும தண்மையைத் தரும். அவ்விடமே வாழ்க்கைக்கு ஏற்ற இடம் எனக் கண்டனர். பழங் கனித் தரும் இளவாழைமரங்களும் செந்நெற்பயிர்களும் தேன் நிறைந்த மலர்களும் அழகுடன் மிளிர்கின்றன. மகளிருடன் விளையாட அன்னம் முதலிய பறவைகளும் உள. இத்தகைய இயற்கை யழகோடு கூடிய இடந்தான் பஞ்சவடி.

இயற்கை யழகு செறிந்த இவ்விடத்திலே இருந்த இராம பிரானின் திருமேனியழகைக் கண்டு வியக்கின்றாள் ஒருத்தி. கொடிய கரிய உருவத்தையுடையவள் அவள். கரும்பாம்பான ராகுவும் தோற்றுப்போகும்படியான கரிய பெரிய உடம்பை யுடையவள். தலையிலே தாமிரம் போன்ற செந்நிறமான செம்பட்டை மயிருடையவள். யாவருக்கும் அழிவையே செய்து வருகின்றாள். உடன் பிறந்தே கொல்லும் நோயைப் போன்று இராவணனை வேரோடு அழியும்படிச் செய்யவல்லவள். அவள் தான் யாரோ? எனின் சூர்ப்பனகையைத் தவிர வேறு யாராய் இருக்க முடியும்.

அவள் கண்ட இராமபிரானின் அழகை நாமும் காண்போம். பொதுவாக அழகுக்கு மன்மதனைக் கூறுவார்கள். கவி இதனைக்

கூறினுல் நயமோ, வினயமோ ஏற்படுமா? அவன் சிவபெருமானுல் எரிக்கப்பட்டு அழிந்து விட்டவனுயிற்றே. ஆதலால் மன்மதனுக்கு வடிவில்லே. அவனே அனங்கன் என்று கூறுவார்கள். இந்த இராமனின் அழகுக்கு இந்திரனேக் கூறலாமோ? எனின் அவனுக்கு உடம்பில் ஆயிரங் கண்கள் உண்டே. இந்த இராமனுக்கு இரண்டு கண்கள்தானே இருக்கின்றன. சிவபெருமானேக் கூறலாம் என்ருல் அவருக்கு மூன்று கண்களாயிற்றே. திருமாலேக் கூறலாம் என்ருலும் அதுவும் பொருந்துவதாயில்லே. திருமாலுக்கு நான்கு தோள்கள் ஆயிற்றே. பின்னே என்ன தான் சொல்லுவது. கவிஞனின் கற்பனேக்கு எட்டாததா அது. சிவபெருமானுல் எரிக்கப்பட்டு உருவழிந்த மன்மதன் நெடுங்காலந் தவஞ்செய்து அத்தவ வலிமையால் முன்னேயினும் அதிக அழகுருவம் பெற்று வந்தவனே இவன்.

கூந்தலின் கரிய நிறத்திற்கு மேகம் உவமையாகும். அது நீண்டு தொங்குகின்றமை மேகக் கூட்டங்கள் மேலிருந்து கீழிறங்கிய வரிசையை ஒப்பதாகும். மயிர்களின் நுனி சுருண்டு இடையிடையே நெறிப்புக் கொண்டு விளங்குவது மேலும் அழகாகும். இத்தகைய அழகுடன் விளங்கும் இவன் தனது தலே மயிரை சடையாகத் தரித்திருக்கிருன். இவன் இவ்வாறு செய்யாமல் அலங்கரித்து முடித்தால் மகளிர்களுடைய கூந்தலழகு தோற்றுவிடும். கூந்தலழகுக்குத் தோற்று மனமுடைந்த மகளிர்கள் தம் உயிரையும் விட்டுவிடுவார்கள். இவனது முக ஒளிக்குத் தாமரையும் ஒப்பாகாது. சந்திரனேக் கூறலாமென்ருல் அதுவும் பொருந்துவதாயில்லே. அதன் கலே தேய்தலும், வளர்தலுமாக இருக்கிறது. பூரணச் சந்திரனேக் கூறினுல் அதற்கும் களங்கம் இருக்கிறது. இவனது முகஒளியோ தேய்தலும் குறைதலும், களங்கமும் இல்லாத சிறந்த தன்மையது. ஆதலால் சந்திரனும் இவனது முகத்திற்கு ஒப்பாகாது.

அதிகநின் றெளிரும்இவ் வழகன் வாண்முகம்
பொதியவிழ் தாமரைப் பூவை யொப்பதோ
கதிர்மதி யாம்எனில் கலேகள் தேயும்அம்
மதியெனின் மதிக்குமோர் மறுவுண்டு என்பரால்.

இவனது அழகிய நீண்ட கைகள் எட்டுத்திக்கு யானைகளது துதிக்கைகளுக்கு ஒப்பாகுமே தவிரச் செழித்துப் பருத்து வளர்ந்த நீண்ட மரம் ஒப்பாகாது. இவனது தோள்களுக்கு கல்மலையும் பொன்மயமான மேருமலையும் ஒப்பாக மாட்டா. திரண்டுருண்டு நீலமணி போன்று விளங்குகின்ற இவன் தோளுக்கு முதிர்ந்த வலிய நீலமணி மலையே ஒப்பாகும். ஒரே சமயத்தில் கண்ணுக்குச் செல்லத் தக்க அளவு மிகப்பரந்த மார்பினையுடையவன். இவனது வாயிதழ்களுக்கு ஒப்புமையாகச் சொல்லத்தக்க பொருள் தேவலோகத்திலும் இருக்கிறதா என ஆராய்கின்றாள் அவள். அங்கும் இல்லை எனத் துணிந்து விட்டாள். பலரும் சொல்லும் பவளத்தை உவமையாகச் சொல்ல அவளுக்குப் பிடிக்கவில்லை. ஏனென்றால் அவன் வாயிதழ்களின் செம்மை அந்தப் பவளத்திற்கு இல்லையே என்பது தான். இராமபிரானது திருவடியழகை நோக்குகின்றாள். இவனது திருவடித்தலத்தைத் தீண்டப் பெற்றதால் பூமிதேவியாகிய பெண் நல்ல பாக்கியத்தைப் பெற்றவளே. அவள் இவனிடம் காதல் கொண்டு திருவடியைத் தீண்டப் பெற்றதால் மகிழ்ந்து உடம்பு முழுவதும் புளகாங்கிதம் அடைந்து சிலிர்ப்புற்ற மயிர்களே இந்தப் புற்கள்.


இராமபிரானது அங்க அழகில் ஈடுபட்ட அவளது கண்களை அப்பிரானது திருமேனி யொளியானது ஈர்க்கின்றது. இவனது திருமேனியொளி சிறந்ததா? ஒளிக்கு நாயகனான சூரியனது ஒளி சிறந்ததா? என்ற ஆராய்ச்சி பிறக்கின்றது அவள் உள்ளத்தில். அப்பிரானது திருமேனி யொளிக்கும் கதிரவன் ஒளிக்கும் ஒப்புமை காண்கிறாள்' இந்தக் கதிரவன்' இவனது ஒளியைக் காணவில்லை போலும். கண்டால் இவன் ஒளிக்கு முன்னிற்கவும் நாணமடைவானே. காணாததால் அல்லவா அவன் தன் அற்பமான ஒளியை வீசிச் செல்கிறான் என்று நினைக்கிறாள். இயற்கையான அழகு முற்றுப் பெற்ற இவனுக்கு அழகைத்தரும் அணிகலமே வேண்டுவதில்லை. அமையவேண்டிய இலக்கணங்கள் அனைத்தும் நிரம்பப் பெற்ற இவனைப் படைத்த பிரமதேவன் பழிக்கத் தக்கவனே. இவனது திருவடித் துகளுக்கும் ஈடாகாத இந்திரன் தேவலோகத்தை




டில்லியில் புதிதாக நிர்மாணிக்கப்பெறும் ஸ்ரீ சாமிநாத சுவாமி கோயில் அமையவிருக்கும் குன்றின் தோற்றம்.



டில்லியில் ஸ்ரீ சாமிநாத சுவாமி கோயில் நிர்மாணிக்கவிருக்கும் இடத்தில 8.5.63ல் நடைபெற்ற விழாவில் திரு. O. V. அழகேசன் அவர்கள் (Minister of State, Ministry of Irrigation & Power) முன்னுரை வழங்குகிருர்.



திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்ற டில்லியில் தேவார நிதியிற கண்டவண்ணம் நியமிக்கப்பெற்ற திருமுறைவாணர் திரு. T. M. தண்டபாணி ஓதுவார் திருப்புகழ் பாடுகிறார்.



டில்லியில் ஸ்ரீ சாமிநாத சுவாமி கோயில் நிர்மாணிக்கப்பெற விருக்கும் இடத்தில் 9-5-63ல் நடந்த விழாவில் கலந்துகொண்ட பக்தகோடிகள்.

யாள்கின்றான். இவனே வனத்தில் வசிக்கின்றான். வனவாசத்திற்கேற்ற மரவுரியாடையை யணிந்துள்ளமையைக் கண்டு சூரியன் ஒளியினும் சிறந்து விளங்கும் இவனது இடையை யடைய இந்த மரவுரியாடைகள் நல்ல தவத்தைச் செய்துள்ளன. பொன்னாலான பட்டாடைகள் இந்த மரவுரியாடை செய்த நற்றவத்தைச் செய்யவில்லை போலும்.

"வற்கலை நோற்றன மாசி லாமணிப்
பொற்கலை நோற்றில போலுமா லென்றாள்."

அப்பெருமான் கொண்டுள்ள தவவேடத்தையும் பார்க்கின்றாள் அவள். இவன் பெறத்தக்க பொருள் இவ்வுலகில் ஒன்றுமே யில்லையே. நிறைந்த அழகுடைய இவன் தன் உடலை வருத்தி வீணாகத் தவத்தைச் செய்வது ஏன்? இவனை அடைந்த அந்தத் தவமும் பெருமை பெற்றதாகியது. இவன் தவத்தை ஏற்க அத் தவந்தான் என்ன தவத்தைச் செய்ததோ? என வியக்கின்றாள் அவள்.

"தவஞ்செயத் தவஞ்செய்த தவமென் என்கின்றாள்"

தாம் படைத்த இராமகாவியக் கோயிலில் பல கோணங்களிலிருந்து இராமபிரானது திருமேனி யழகையும் குணவழகையும் காட்டும் கம்பனின் பெருமைதான் இயம்புதற்கு எளிதோ?

பலவாறு அவனது அழகைக் கண்ட அவளுக்கு அவன்மீது உண்டான அன்புக்கு எல்லையுண்டோ? ஆசை வெள்ளத்திலே மூழ்கிவிட்டாள். காமவேதனையால் மனம் வாடி வருந்தினாள். இவனை நாயகனாகப் பெறாவிட்டால் உயிரை விடுவேன் எனத் துணிந்தாள். அழகின் உருவாய இவன் எதிரில் கொடூரமான இந்த உருவத்தில் செல்லலாகாது. இவ்வடிவத்தோடு சென்றால் என்னைக் கொடிய அரக்கி என்று நீக்கி விடுவான். இதற்கு என்ன செய்வது என்று ஆலோசித்தாள். நல்ல கட்டழகியின் உருவத்தோடு செல்ல உறுதி கொண்டாள். உடனே மிக அழகிய வடிவம் வேண்டுமென்று நினைத்து இலக்குமி மந்திரத்தை உருவிட்டாள். அதனால் சந்திரனைவிடச் சிறந்த ஒளியுள்ள முக அழகைப் பெற்றாள். அவளது உடல் ஒளியானது ஆகாயமெங்கும் பரவியது.

கற்பகமரத்தைச் சார்ந்த பூங்கொடியானது மிகமணங் கமழும் தன்மையது. அதைக்காமவல்லி என்றுங் கூறுவர். அந்தக் காமவல்லியாகிய பூங்கொடி ஒரு பெண் வடிவம் கொண்டு வந்தாற் போன்று விளங்கினுள் அவள். தேவலோகத்திலிருந்து அருள் செய்ய வந்ததான தேவாமிர்தமானது ஒரு அழகிய பெண் வடிவங் கொண்டு வந்தால் போன்ற இனிய வடிவங் கொண்டு வந்தாள். அவளுடைய இளமை அழகைக் கண்டு இலக்குமியும், கிளியும் பின்னடைவார்கள். அவ்வளவு சிறந்த கன்னியிளங் கட்டழகி யாயினுள். மயிலே யொத்த சாயலேயுடையவள். மான் போன்ற பார்வையையுடையவள். நறுமணமுள்ள தேனேயொப்பச் சொற்களேயுடையவள். அவள் காற்சிலம்பும், இடையணியும், நூலில் கோத்தமணி மாலேகளும் ஒலிக்கின்றன. அவள் கூந்தலில் சூடியுள்ள மலர்களில் மொய்க்கும் வண்டுகள் ஆரவாரிக்கின்றன.

அவளது அழகிய செந்தாமரை போன்ற சிறிய பாதத்திற்கு செம்பஞ்சு மலரும் இளந்தளிர்களும் ஒப்பாகோம் என்று நாணத்தால் வருந்தும். அத்தகைய அழகிய பாதங்கள். வஞ்சிக்கொடி போன்ற மென்மையும் துவளும் தன்மையும் கொண்ட உடம்பு. மயிலின் சாயல்மிளிர அன்னம் போன்ற நடையினேயுடையவள். ஈடில்லா புறவழகு கொண்ட இவளுக்கு அகத்தழகு ஏற்பட்டு விட்டதா? என்று நினேக்கத் தோன்றுமல்லவா? ஆனுல் அது தான் இல்லே. நஞ்சையொத்த கொடிய வஞ்சனேயை 'யுடையவள் தான் அவள்.

பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்கச்
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடி யளாகி
அஞ்சொல்இள மஞ்ஞையென அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்.

அழகை யறிந்து அழகைப்புனேந்து காட்டும் கவிஞுனை கம்பனேப் போலுண்டோ!

HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

[மலர் 14, இதழ் 6-ன் தொடர்ச்சி]

II

THIRUNAVUKKARASU SWAMI

(Mo.e commonly referred to as APPARSWAMI)

32 கழித்திலேன்காமவெந்நோய்காதன்மையென்னும்பாசம்
ஒழித்திலேனூன்கணேக்கியுணர்வெனுமிமைதிறந்து
விழித்திலேன்வெளிறுதோன்றவினையெனுஞ்சரக்குக்கொண்டேன்
அழித்திலேனயர்த்துப்போனேனதிகைவீரட்டனுரே.

32 The bond of lust I cannot break;
Desire's fierce torture will not die;
My soul I cannot stab awake
To scan my flesh with seeing eye.
I bear upon me load of deeds,
Load such as I can ne'er lay down.
Athihai Virattanam's Lord,
Weary of joyless life I've grown.

Reproduced with the kind permission of Oxford University Press, Calcutta.

(N.B. Copies available for sale at the above Press.)

வாழி வாழியவே

திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள்,
கல்யாண நகர், சென்னை-28.

செய்ய தமிழை வளர்ப்பதுவும்
தெய்வச் சைவம் வளர்ப்பதுவும்
மெய்யன் இறைவன் எனும்உண்மை
விரிக்கும் தேவா ரப்பனுவல்
வையம் எங்கும் பரப்புவதும்
மற்ற அறங்கள் புரிவதுவும்
தையல் பாகன் தனைஎண்ணித்
தளரா தியற்றும் காசிமடம். (1)

கனந்தாங் கியசெஞ் சடையப்பன்
கவினுர் கோயில் ஓங்குதிருப்
பனந்தா ளிலங்கும் அம்மடத்தில்
பணிவும் தவமும் ஒருருவாய்
மனந்தாங் கியநற் பத்தியொடு
வளரும் துறவி அருணந்தி
சனந்தாழ்ந் திறைஞ்சும் திருவாளன்
சாந்த மூர்த்தி புகழ்பெரிதே. (2)

அன்னேன் அன்பின் ஆராய்ந்திங்
கறங்கள் வளர்க்கத் தக்கவன்இப்
பின்னேன் என்று தெளிந்தழைத்துப்
பேணும் ஞானப் பெருஞ்செல்வ,
எந்நோன் புஞ்செய் துயர்முத்துக்
குமார சாமி எனும்நாமம்
துன்னு நின்ற சாமிநின்
தோற்றம் கண்டு மகிழ்ந்தனனே. (3)

பணிந்து வரையும் இந்நிருபம்
　　பார்வை சார்த்திக் கண்டருள்க;
அணைந்து பனந்தா ளினில்நென்னல்
　　ஐந்து மணியே முதல் நின்னோ
டிணைந்து பலவும் பேசிஇன்பம்
　　எய்தச் செய்தாய்; சிலநூல்கள்
மணந்தங் கியநின் கையாலே
　　வழங்கி அன்பு காட்டினையே! (4)

உலகம் முழுதும் இறையருளே
　　ஓங்க வேண்டும்; பகையொழிந்து
நிலவும் அன்பே நிறைந்தெவரும்
　　நெஞ்சம் சாந்தம் நிரம்பவாழ்ந்
திலக வேண்டும்; சமயக்காழ்ப்
　　பின்றிப் பழகல் வேண்டும்; மன்னர்
தலைமைச் செயலென் றன்புநெறி
　　தன்னைப் பரப்ப வேண்டுமென்றாய். (5)

நல்ல கருத்துப் பலகொண்டாய்,
　　நயஞ்சேர் தரும்நல் உரைகொண்டாய்;
எல்லுற் றொளிரும் வடிவேற்கை
　　எம்மான் செந்தில் ஆண்டவனால்
வல்ல புலமை படைத்துயர்ந்த
　　மதினர் குமர குருபரன்றன்
தொல்லை மரபுக் கேற்றஇயல்
　　துன்னல் நின்பாற் கண்டுவந்தேன். (6)

நின்றன் கருத்துப் படியாவும்
　　நிகழும் வண்ணம் வடிவேலன்
நன்று கருணை பாலிக்க
　　வேண்டு மென்று நனிதொழுதேன்;
என்றும் பெரிய அறம்பலவும்
　　இயற்றித் தமிழும் சைவமும்சீர்
ஒன்ற விளங்கச் செய்துநீ
　　ஓங்கி வாழி வாழியவே. (7)

நீதிநெறி விளக்கம்

உரைநடையும், ஆங்கில மொழிபெயர்ப்பும்*

பாலகவி வயிநாகரம்,
திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
தேவகோட்டை.

[மலர் 14. இதழ் 6-ன் தொடர்ச்சி]

உலையா முயற்சி களைகணு ஊழின்
வலிசிந்தும் வன்மையும் உண்டே—உலகறியப்
பான்முளை தின்று மறலி உயிர்குடித்த
கான்முளையே போலுங் கரி.

துன்பம் வருவது பற்றி இளைப்படையாது செய்யும் முயற்சியையே பற்றுக்கோடாகக் கொண்டு ஊழினது பெருவன்மையைக் கெடுக்கின்ற ஆற்றலும் ஒரு சிலருக்கு உண்டு. அதற்குச் சான்று உலகமெல்லாம் அறியும்படி ஊழின் முளையை நாசம் செய்து கூற்றுவனது உயிரைக்குடித்த மார்க்கண்டேயனாகிய சிறுவனே ஆவான்.

Perseverance

Persistent efforts can conquer destiny. The boy Markandeya, who, as the world knows, overcame destiny and conquered Yama, bears ample testimony to this truth. 51

கால மறிந்தாங் கிடமறிந்து செய்வினையின்
மூல மறிந்து விளைவறிந்து—மேலுந்தாம்
சூழ்வன சூழ்ந்து துணையை வலிதெரிந்
தாள்வினை யாளப் படும்.

Translated by: Sri P. Mutharasu M. A. B., T., Head of the Tamil Department, Sri K. G. S. Arts College, Arulnandi Nagar.

ஒரு தொழிலைச் செய்வதற்குரிய காலத்தை அறிந்து அதனைச் செய்து முடித்தற்குரிய இடத்தை அறிந்து செய்கின்ற தொழிலின் அடிப்படையான காரணத்தை அறிந்து அத்தொழிலால் வரும் பயனை அறிந்து அதன் பின்னரும் தாம் ஆராய்ந்து முடிவு காண வேண்டியவற்றை ஆராய்ந்தறிந்து அத்தொழிலைச் செய்து முடிப்பதற்குத் துணையா யிருப்பவர்களின் வலிமைகளைத் தெரிந்து மேற்கொண்ட தொழிலுக்குரிய முயற்சி செய்யப்படும்.

Of accomplishing an enterprise

An enterprise may be successfully accomplished with the knowledge of proper time, place, the causes and consequences and on consideration of all circumstances connected therewith and after due assessment of the resources at one's command. 52

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்.

மேற்கொண்ட காரியத்தை நிறைவேற்றுவதிலேயே கண்ணையும் கருத்தையும் வைத்திருப்பவர்கள் உடலுழைப்பால் வருகின்ற துன்பத்தைப் பொருட்படுத்த மாட்டார்கள். பசியை நோக்க மாட்டார்கள். கண் தூங்கவும் மாட்டார்கள். எவரெவரால் வருகின்ற தீமையையும் கருதமாட்டார்கள். காலத்தின் அருமையையும் பார்க்க மாட்டார்கள். மற்றவர்கள் தம்மை அவமதித்தலையும் பொருளாகக் கொள்ள மாட்டார்கள்.

Resolute Concentration

Those who have set their whole heart on doing a thing will never regard bodily pain; feel no hunger; indulge not in sleep; care not for the hindrance of others; regard not the unsuitability of time and mind not the scoffs of others. 53

சிறிய பகையெனினும் ஒம்புதல் தேற்ருர்
பெரிதும் பிழைபா டுடையர்—நிறைகயத்
தாழ்நீர் மடுவில் தவளை குதிப்பினும்
யானை நிழல்காண் பரிது.

நிறைந்த தண்ணீரையுடைய ஆழமாகிய மடுவில் ஒரு தவளை குதித்தாலும் அருகில் நிற்கும் யானையினது நிழல் அம்மடு நீரில் காணமுடியாது. அதுபோலப் பகைமைகள் சிறியனவே யாயினும் அவற்றினின்றும் தம்மைக் காத்துக் கொள்ளுதற்கு ஆராய்ந்து அறியாதவர்கள் பெரிதும் பிழைபாடுடையவர்களா வார்கள்.

Of guarding against even the smallest foe

Those who do not care to guard themselves against even the smallest foe are to blame highly; for the leaping of even a small frog in the deep waters of a large pool will make it impossible to see even the shadow of an elephant standing on the bank. 54

புறப்பகை கோடியின் மிக்குறினும் அஞ்சார்
அகப்பகை ஒன்றஞ்சிக் காப்ப—அனைத்துலகும்
சொல்லொன்றின் யாப்பார் பரிந்தோம்பிக் காப்பவே
பல்காலுங் காமப் பகை.

உலகமுழுவதையும் தமது சொல்லொன்றினுலே வசப் படுத்தி யிர்க்கும் வன்மையுடைய பெரியவர்கள் பலமுறையும் காமமாகிய அகப்பகையைத் தம்மிடம் வராதபடி மிக வருந்திப் பாது காப்பார்கள். அதுபோலப் புறப்பகைகள் கோடிக்கு மேல் மிகுதியாக இருந்த போதிலும் அதற்காக அறிஞர்கள் அஞ்சமாட்டார்கள். ஆனல் அகப்பகை ஒன்ருக இருந்தாலும் கூட அதற்கு அஞ்சி அதனுல் தங்களுக்கு ஏதும் தீங்கு நேராத படி பாதுகாத்துக் கொள்ளுவார்கள்.

Of guarding against secret foes

The sages who can sway the whole world with a single word strive, with unremitting caution, to suppress the influence of lust. Similarly, the King who is fearless of a crore of avowed enemies from without, must necessarily guard against one secret foe. 55

(தொடரும்)

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் வெளியீடு.

புதிய பதிப்பு அறிவிப்பு.

தாயுமான சுவாமிகள் பாடல்

சுவாமிகள் வரலாறு, குறிப்புரை, பாடலின்
ஆராய்ச்சிக் குறிப்புடனும்.

உயர்ந்தரக வெள்ளைத்தாளில் சுமார் 350 பக்கங்கள் கொண்டது.
ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் 275ம் ஆண்டு மகேசுவர பூசை
நினைவு மலர் (10—6—63)

ஸ்ரீ காசி மடம் இளவரசு, வித்துவான்
ஸ்ரீமத் முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள்
அவர்களால் வெளியிடப் பெற்றது.

விலை ரூ. 1-25. தபால் கட்டணம் வேறு.

கிடைக்குமிடங்கள் :

1. Sree Swaminatha Swami Seva Samaj (Regd.) Sector IV Qr. No. 663, Ramakrishnapuram, NEW DELHI-16
2. T. M. குமரகுருபரன் பிள்ளை, B. A., B. L., வக்கீல் ஸ்ரீவைகுண்டம்.

இப்புத்தகத்தின் விற்பனைத் தொகை புதிய தில்லி, ஸ்ரீ சுவாமிநாத சுவாமி சேவா சமாஜத்தைச் சாரும்.

ஈங்கோய் இலக்கியம்

திரு. கு. பழநிசாமி அவர்கள் M. A.,
தமிழ் விரிவுரையாளர்,
ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் கல்லூரி, அருள்நந்தி நகர்.

விலங்கினங்களின் அன்பு வாழ்க்கை :

மாதொரு பாகனின் ஈங்கோய் மலையில் வாழும் குறவர் பெருமக்களின் பண்பாடு மிக்க வாழ்வு ஒருவகையில் விளங்கியது. அன்போடும் அமைதியோடும் இயற்கைச் சூழலோடு ஒன்றிக் கிடக்கும் அவர்களின் வாழ்வினை விட அங்குறையும் விலங்கினங்களின் இயற்கை வாழ்வு சுவை மிக்கதாக இருக்கின்றது.

பெருங்கைக்களிறும், புலியும், மானும் கருங்கைக் குரங்கும் கரடியும் பிறவும் அக்காட்டுப் பரப்பில் வாழ்வாங்கு வாழ்கின்றன. கவிஞர் நக்கீரதேவர் அவைகளின் வாழ்வின்பங்களை எல்லாம் கண்டுரைக்கின்றார். 'அதன் வண்ணப் பாங்கு கற்பனை நிறைந்த நெஞ்சங்கட் கெல்லாம் கவர்ச்சி தந்து நிறைவளிக்கிறது.

காதல் மடப்பிடியோடும் களிறு :

காட்டு விலங்குகளில் களிறு அன்புணர்ச்சியில் சிறந்து விளங்குவதாகும். வெயிலன்றிப் பிறிதில்லாப் பாலை நிலத்தில் வேழம் தன் மென் பிடிக்குத் தடக்கையால் வெயில் மறைத்து அன்பு காட்டும் செய்திகளை எல்லாம் பழம் பாடல்கள் நன்கு தெரிவிக்கின்றன. பெண் யானைகளின் உணவிற்கும் அவைகளின் பாதுகாப்பிற்கும், பிறநலன்களுக்கும் களிறுகள் எடுத்துக் கொள்ளும் கவலையினை மிக மிக அழகாகச் சங்க ஓவியங்கள் புனைந்து காட்டும்.

ஈங்கோய் மலையின் யானைகளும் அந்தப் பரம்பரை உணர்ச்சியைப் பெற்றனவாக இருக்கின்றன. தனது இளம் பிடியோடும் வீரத்திரு நடை போட்டு வந்து கொண்டிருக்கின்றது ஒரு களிறு. தனிமை மிக்கதொரு பகுதியில் தனது பிடியோடும் மெல்லென இறுமாந்து வரும் அவ்வேளையில் ஒரு சிங்கம் எதிர்ப்பட்டு விடுகின்றது.

எங்கிருந்துதான் அந்தச் சினம் வந்ததோ தெரியாது! களிறு தனது பிடியினை நோக்கி அதற்குத் துணிவுரைப்பதுபோல் நோக்கிவிட்டுத் தும்பிக்கையை உயர்த்தி இடிஇடிப்பது போன்று காடே அதிரும்படியாகப் பிளிறுகிறது.

இவ்வளவிற்குச் சினத்தைச் சிறிதும் எதிர்பாராத சிங்கம் அஞ்சிக் குலைந்து அலைவுற்று நடுங்குகிறது. எங்கேயோ இருந்து அலுத்துக்களைத்துப் போய் வந்து கொண்டிருந்த சிங்கம் தான் பகை நோக்கோடு வரவில்லை என்றாலும், அதனை எல்லாம் எண்ணிப் பார்க்கவோ அல்லது பிறமாதிரி செயல்படவோ அதற்கு இனிநேரமில்லை. இப்போது களிறு காணப்படும் நிலையில் சிங்கம் ஓடிப் பிழைத்தலன்றி வேறு எதுவும் பொருத்தமான செயலாக இருக்க முடியாது. எனவே அப்படியே திரும்பி விரைந்து ஓடத் தொடங்குகின்றது சிங்கம். பொங்கி எழுந்த சீற்றம் தணிகிறது களிற்றுயானைக்கு. பின்னர் பெருமிதத்துடன் நடந்து செல்லுகின்றன அவ்யானைகள். அக்காட்சியை,

> அரிகரியைக் கண்டவிடத்து அஞ்சலுப்பாய்ஓட
> பிரிவரிய தன்பிடியைப் பேணிக்—கரிபெரிதும்
> கையெடுத்து நீட்டிக் கதம்சிறக்கும் ஈங்கோயே
> மையடுத்த கண்டன் மலை.

என்று உரைக்கிறது பாடல்.

ஊடல் உவகை :

உப்பினைப் போன்றது புலவி என்கின்றார் திருவள்ளுவர். ஊடல் அமையாத காதல் வாழ்வும் உப்பு அமையாத உயர்வகை உணவும் ஒன்றுதான். இன்ப உணர்வை மிகுதிப் படுத்த ஊடற் பண்பு எப்படியோ உயிரினங்களிடையே அமைந்து

கிடக்கின்றது. கூடலும் ஊடலும் பெறுகின்ற வாழ்வில்தான் இன்பக் கொள்ளையைக் காணலாம் என்று உரைப்பர் இயல் புணர்ந்தோர்.

யானைகளின் வாழ்வே யாயினும், அங்கேயும் ஊடல் உவகையைக் காணமுடிகின்றது. பெண் யானைக்கு ஏதோ மனக்குறை. சிறிய வருத்தம். அதுவே அதன் நெஞ்சத்து அமைதியைக் கெடுத்து விடுகின்றது.

கனிந்துடன் உலவ, விளையாட அதற்கு விருப்பம் இல்லை. ஒரு மூலையில் செயலற்றுப் படுத்து விட்டது. உள்ளத்தில் எழுச்சியில்லை. சோர்ந்துபோன உடலை உறக்கம் தழுவிக் கொண்டது.

இதனைக் கண்ட களிற்றின் நெஞ்சமெல்லாம் வலிக்கின்றது. அன்பின் பிணைப்பில் ஒரு கண்ணில் நீர் வடிந்தால் இன்னொரு கண்ணில் உதிரமல்லவா கொட்டுகின்றது!

களிற்று யானைக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. அதற்கு ஒன்றும் விளங்கவில்லை. உணவு பற்றிக் கூடக் கவலைப் படாமல் ஊடல் வருத்தத்தில் உறங்கி விட்டதே பிடி என்று கவல்கின்றது களிறு. அந்த ஊடலைத்தான் எப்படித் தீர்ப்பது?

வாழைக் கொல்லைகள் நிறையக் காணப்படுகின்றன. செழித்திருக்கும் வாழை மரங்களில் எல்லாம் கொழுவிய கனிகள் குலைகுலையாய்த் தொங்குகின்றன. கண்ணப்பர் இறைவனுக்கு இறைச்சியைத் தேர்ந்தெடுத்ததுபோலச் சுவைத்துச் சுவைத்து இறுதியில் கதலி வாழைக் கனிகளைத் தேர்ந்தெடுக்கிறது களிறு. இதனைக் கொண்டு சென்றால் பிடியின் ஊடல் தீர்ந்து விடுமா என்ன? களிற்றுக்குச் சிறந்த வழியாகத்தான் அது புலப்படுகிறது.

பிடியிருக்கும் இடத்தை அணுகி மெல்ல அதன் மருங்கில் பழத்தை வைத்துவிட்ட களிறு அதனை எழுப்புகிறது. விழித்துப் பார்த்த கண்களில் இன்னும் ஊடல் முற்றிலுமாக நீங்கவில்லை என்ற குறிப்புத்தான் தென்படுகிறது. பழத்தைச் சுட்டிக் காட்

டிய களிறு "பொன்னே கொடியே புனைபூங்கோதாய்" என்று தொடங்கியிருக்குமோ?

அடுத்தகணம் பெண்யானை எழுந்து விட்டது. அதன் பார்வையிலே நாணத்தின் சாயல் தவழ்கிறது. அப்படி எல்லாம் புகழாதீர்கள் என்பது போல ஒரு பெண்மையின் தோற்றம். ஊடலும் தீர்ந்து விட்டது. பழங்களையும் உண்டு முடித்தாகி விட்டது. அதோ அது தன் தலைவனுடன் சென்று கொண்டிருப்பதில்தான் எத்துணை அழகு விளங்குகிறது? பாம்பணியும் பிரானவன்தன் மலையில்தான் இக்காட்சியைக் காண்கின்றார் கவிஞர்.

ஊடிப் பிடிஉறங்க ஒண்கதலி வண்கனிகள்
நாடிக் களிறு நயந்தெடுத்துக்—கூடி
குணமருட்டிக் கொண்டாடும் ஈங்கோயே வானோர்
குணமருட்டும் கோளரவன் குன்று.

விண் களிக்க நஞ்சுண்டான் பண்பு:

இடத்தின் தன்மை, பிறப்பின் பண்பு, சூழலின் செல்வாக்கு ஆகியவை அவைகளையும் அறியாமலே உயிரினங்களிடத்தில் படிந்து கிடக்கின்றன. இதுவே இயற்கையின் ஒரு கூற்று நியதியாகவும் இருக்கின்றது.

தனக்குத் தேவையிருக்கின்ற போதும், தனது தேவையினைப் பெரிது படுத்தாமல் பிறருக்குக் கொடுத்து உதவுவது வெளிப் புறத்தில் ஒரு இழப்பாகப் படலாம். ஆனால் நெஞ்சகத்தில் அப்போது நிறைந்து தேங்கும் இன்பம் அளப்பரிது. எல்லையற்ற அன்பின் அடிப்படையில் தான் இத்தகைய செயல் நிகழ முடியும்.

வானவர்கள் கடலைக் கடையும்போது எல்லாப் பொருள்களும் வந்தன. எல்லோரும் விரும்பி எடுத்துக் கொண்டார்கள். "இன்பமுண்டேல் துன்பம் உண்டு" இது அவர்களுக்குத் தெரியாது போலும். அமுதம் வந்தபோது நமக்கே என்று துடித்த அவர்கள் நஞ்சினைக் கண்டபோது அஞ்சினர்கள். நடுநடுங்கிச் சோர்ந்தார்கள். உலகத்தையே அழிப்பதாகப் புறப்பட்டது அந்

நஞ்சு. சிவபெருமான் நல்ல பொருள்கள் பல வந்தக்காலத்தும் எதையும் விரும்பவில்லை. அமுதம் வந்தது. அதையும் விரும்ப வில்லை. ஆனால் நஞ்சினைக் கண்டு பிறர் அஞ்சுவதையும் அதற் காகப் பிறர் துன்பத்தையும் கண்டார். ஈறிலாத அவ்வீசன் அந்த நஞ்சினைத்தானுண்டு தேவர்க்கும் பிறர்க்கும் தண்ணளி செய்தான். இவ்வாறு தான் துன்பத்தை ஏற்றுக்கொண்டு, பிறர் அமுதம் உண்டு களிப்பதைக் கண்டு தானும் களிகூர்ந் தான். தான் நஞ்சு உண்கிறோமே என்று அவனுக்குக் கவலை யில்லை. அவனது அன்பு நோக்கிற்கு இலக்கான மற்றவர்கள் மகிழ்ச்சியே அவனுக்குப் போதுமானதாக இருந்தது.

இத் தன்மை வாய்ந்த சிவபெருமான் மலையில், ஒரு யானை. அதற்கும் மேற்கூறிய பண்பு சிறிது இருக்கிறது என்கின்றார் நக்கீரர்.

களிற்றுக்கும் பசியின் தொல்லைதான். ஆனால் அதன் அன் பிற்கு இலக்கான பிடியானையின் பசி அதன் பசியினையும் மறக்கச் செய்துவிட்டது. சந்தனத்தின் மென் தழையைக் கொண்டுவந்து செந்தேனில் தோய்த்தெடுத்துப் பிடியருந்த அதன் வாயிலே ஊட்டுகிறது. தனது பசி, களிற்றின் இவ்வன்புச் செயலால் மறைகின்றபோது பெண் யானைக்கொரு மகிழ்ச்சி. அதனைப் பார்க்கின்ற ஆண் யானையோ அளவிறந்த களிப்பில் மூழ்கிவிடுகிறது. அதற்கு இப்போது பசியே இல்லை. பிடியின் மகிழ்ச்சியிலே அது தன்னையே மறந்துவிட்டது.

விண்களிக்க நஞ்சுண்டான் வெற்பிலே இந்தக் காட்சி யினைக் காண்கிறோம். இறைவன் செயலுக்கும் யானைகளின் செயலுக்கும் சிறிதே ஒப்புமை யிருப்பினும், யானைகளின் அவ் வன்புச் செயல் காணும்போது சிவபெருமான் தான் விண்களிக்க நஞ்சுண்ட நிகழ்ச்சியே கவிஞரின் நினைவில் மோதியிருக்கும் போலும்!

சந்தனப் பூந்தழையைச் செந்தேனில் தோய்த்தியானை
மந்த மடப்பிடியின் வாய்கொடுப்ப—வந்ததன்
கண்களிக்கத் தான்களிக்கும் ஈங்கோயே தேங்காதே
விண்களிக்க நஞ்சுண்டான் வெற்பு.

காற்று வீசும் களிறு.

மற்றுமொரு யானை இணைகளைக் காண்போம். காற்றே யில்லை. ஒரே இறுக்கமாக இருக்கிறது. ஊடலும் கூடலும் தந்த உடலின் களைப்புத் தீரவில்லை. கூடி மகிழ்ந்த பிடியின் உடம்பில் மெல்லிய இளந்தென்றல் பட்டால் சற்று நலமாக இருக்கும். தனது துணைக்கு ஒவ்வொரு நொடியிலும் அதன் தேவையைத் தீர்த்து வைப்பதே ஒத்த மனையறத்தின் பாங்காகக் காணப்படுகிறது. யானைகளின் வாழ்வினையே காண்கின்றோ மாயினும் மனிதனின் வாழ்வுதான் இங்கும் பளிச்சிடுகிறது.

உடல்களைத்திருக்கும் பிடியின் சோர்வு போக அது சற்று காற்றில் உலவினால் நல்லது. ஆனால் காற்றுதான் இல்லையே. ஆண் யானை, பெரியதொரு இலையைப் பறித்துக் கொண்டு வந்து அதனை விசிறியாகக்கொண்டு பெண் யானைக்கு வீசு கின்றது. பிடியின் உடம்பெல்லாம் புத்துணர்ச்சி மலர்கிறது. அதுமெல்ல எழுந்து நடக்கின்றது. அப்படியே மறுபக்கத்திற்கு அழைத்துச் சென்று அங்கே வீசும் மெல்லிய பூங் காற்றின் இனிமையை நுகரச் செய்கிறது அக்களிறு.

யானைகளின் காதல் வாழ்வுதான் எவ்வளவு மென்மை யாகவும் நுட்பமாகவும் இருக்கின்றது!

கலவிக் களிறசைந்த காற்றெங்கும் காணாது
இலைகைக்கொண் டேந்திக்கால் வீச—உலவிச்சென்
றொண்பிடிகாற் றேற்றுவக்கும் ஈங்கோயே பாங்காய
வெண்பொடிநீற் றான்மருவும் வெற்பு.

வெண்ணீறணிந்து வழிகாட்டும் வான்பொருளாம் இறைவன் குன்றத்தில் இத்தகைய காட்சிகளுக்குப் பஞ்சமேதும் இல்லை.

தொடர் எண்	புத்தகத்தின் பெயர்	ஆசிரியரின் பெயர்
9767	School Magazine 1961	S. V. Union High School.
9768	Pocha's seeds. 1962-63	Pastonjee P. Pocha & Sons, Poona-1
9769	திருமந்திர மாநாட்டு மலர்	திருவாவடுதுறை ஆதீனம்.
9770	இந்துதர்மம்	K. Kanapathi Pillai & S. Chinniah.
9771	திருவெம்பாவை, மூலமும் இசையமைப்பும் கூடியது.	வெ. இராஜாமணி ஐயர் 6-35, கரோல்பாக், புதுடில்லி.
9772	S. T. Hindu College Magazine Vol. X March 1963	Nagercovil, Kanyakumari Dist.
9773	கலைக்களஞ்சியம்	தமிழ்வளர்ச்சிக் கழகம்.
9774	புறநானூறு, மூலமும் உரையும்	டாக்டர் உ. வே. சாமிநாதய்யர், மதறாஸ்
9775 to 78	பாண்டிநாட்டுத் தலங்கள்	சமய பிரசார நிலையம்.
9779	சிவலீலையும், சித்தாந்தமும்	சுவாமி சிவானந்தர்.
9780	என்கதை – ஹெலன்கெல்லர்	பெர்ல் பப்ளிகேஷன், பிரைவேட் லிமிட்டெட்
9781	சுதந்திரமும் பண்பாடும்	ஜான்டூபா
9782 to 88	Thevaram Hymns on Sri Sailam	Sri Kasi Mutt, Tirupanandal.
9789 to 9800	திருவிராமேச்சுரத்திருப் பதிகங்கள்	தருமையாதீனம்.

(தொடரும்)

திருப்பனந்தாள் - ஸ்ரீ காசி மடம்

'திருமுறை வெளியீடுகள்'

			ரூ. ந. பை
1	விநாயகர் திருமுறை	...	0 06
2	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர் குறிப்புரையுடன் (புதிய பதிப்பு)	...	3 50
3	சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தம்	...	3 00
4*	திருஞானசம்பந்தர் தேவாரம் (மூலம்மட்டும் புதிய பதிப்பு)	...	2 75
5*	திருநாவுக்கரசர் தேவாரம் ,, ,,	...	2 00
6*	சுந்தரர் தேவாரம் ,,	...	1 30
7*	திருவாசகம் ,,	...	0 56
8*	திருக்கோவையார்-பேராசிரியர் உரையும் பழையவுரையும் (புதிய பதிப்பு)	...	2 90
9	ஒன்பதாம் திருமுறை-திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் (மூலம்மட்டும்)	...	0 56
10*	திருமந்திரம் ,, (புதிய பதிப்பு)	...	2 25
11*	பதினோராந்திருமுறை ,, ,,	...	1 50
12	அம்மையார் அற்புதத் திருவந்தாதி (புதிய பதிப்பு)	...	0 25
13	திருக்கைலாயஞானவுலா - உரையுடன்	...	0 50
14	பெரிய புராணம் (மூலம்மட்டும்) (அச்சில்)		
15*	அகத்தியர் தேவாரத்திரட்டு	...	0 37
16	திருவிளையாடற் புராணம் (மூலம்மட்டும்)	...	3 00
17	கந்தபுராணச் சுருக்கம் (மூலம்மட்டும்)	...	1 75
18	கந்தபுராணம் – முதல் மூன்று காண்டங்கள் ,,	...	2 75
19	,, யுத்த தேவகாண்டம் ,,	...	2 00
20	,, தக்ஷகாண்டம் ,,	...	1 50
21	கந்தர் அலங்காரம் - குறிப்புரையுடன்	...	0 25
22	கந்தரனுபூதி	...	0 13
23	கந்தர் கலிவெண்பா – ஆங்கிலம் ஹிந்தி மொழி பெயர்ப்புக்களுடன்	...	0 37
24	கந்தர் கலிவெண்பா - மூலம் மட்டும்	...	0 10
25	கந்தர் கலிவெண்பா - மூலமும் – உரையும்	...	0 37
26	நீதிநெறி விளக்கம்-ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது	...	0 50
27	சகலகலாவல்லிமாலை – ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது	...	0 06
28	திருக்குறள் - அறத்துப்பால் மூலமும் குறிப்புரையும் ஹிந்தி மொழி பெயர்ப்பும்	...	1 50
29	திருக்குறள் – பொருட்பால் ,,	...	2 50
30	திருக்குறள் – காமத்துப்பால் ,,	...	1 00
	ஷை 28, 29, 30 திருக்குறள் 3 புத்தகமும்	...	4 00
31	திருக்குறள் மூலமும் குறிப்புரையும்	...	0 75
32	திருக்குறள் - பொருட்பால் பரிமேலழகர் உரை இலக்கணக் குறிப்பின் விளக்கம்	...	0 13

Registered With the Registrar of Newspapers for India
Under No. R. No. 1485/57.

Regd No. M. 5574 குமரகுருபரன்.

33	முதுமொழி மேல் வைப்பு (குறிப்புரையுடன்) ...	0 75
34	திருவுசாத்தானக் கல்லெழுத்துக்கள் ...	0 37
35	திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா - மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் - மதுரைக் கலம்பகம் - நீதிநெறி விளக்கம் - மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணி மாலை - மதுரை மீனாட்சியம்மை குறம் ...	2 75
36	திருவாரூர் நான்மணிமாலை - முத்துக் குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் ...	1 25
37	சிதம்பர மும்மணிக்கோவை - சிதம்பரச் செய்யுட்கோவை - தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை ...	1 00
38	பண்டார மும்மணிக் கோவை - காசிக் கலம்பகம் - சகலகலாவல்லி மாலை ...	1 00
39	சிதம்பரச் செய்யுட்கோவை ...	0 75
40	முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் ...	0 50
41	பெரியபுராணம் - உரைநடை ...	2 00
42	திருவிளையாடற் புராணம் - உரைநடை ...	2 25
43	குமரகுருபர சுவாமிகள் ஜீவிய சரித்திரப்பட விளக்கங்களும் கந்தர்கலிவெண்பா விளக்கப்படங்களும் ...	0 50
44	திருக்கயிலைத் திருமுறை ...	0 37
45	திருக்கடவூர்த் திருமுறையும் பிரபந்தங்களும் ...	0 19
46	செந்திலாண்டவன் மகிமை ...	0 13
47	திருக்குறள் - உரைக்கொத்து - அறத்துப்பால் 3-ம் பதிப்பு ...	1 37
48	௸ ௸ பொருட்பால் 2-ம் பதிப்பு ...	2 75
49	௸ ௸ காமத்துப்பால் ௸ ...	1 20
50	அபிராமி அந்தாதி - தெளிவுரையுடன் ...	0 50
51	மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் (குறிப்புரையுடன்) ...	0 50
52	கந்தரனுபூதி-தெளிவுரையுடன் ...	0 35
53	திருவாரூர்-திருப்பதுவல்கள் ...	0 10
54	திருவெம்பாவை-திருப்பள்ளியெழுச்சி ...	0 10
55	பழமொழித்திருமுறை ...	0 25
56	திருவாரூர் நான்மணிமாலை ...	0 50

மேலேகண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள்:-

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்.
2. ஸ்ரீ K. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்,
"தியாகராஜ விலாசம்" 53, பிள்ளையார் கோவில்தெரு,
திருவேட்டீஸ்வரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை - 5.

குறிப்பு:- • இக்குறியிடப் பெற்றவற்றின் விற்பனைத் தொகை ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்ற பன்னிரு திருமுறைப்பதிப்பு நிதியைச்சாரும். மற்ற நூல்களில் திருக்குறள் உரைக்கொத்து (எண் 47, 48, 49) தவிர்த்து எஞ்சியவற்றின் விற்பனைத்தொகை 'குமரகுருபரன்' பத்திரிகையைச்சாரும்.

அச்சிட்டது:— குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம் - '63.